www.tamilarangam.net

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR-
-SEINE : FRANCE

Raya

# தூண்டில்




TAMILISCHE ZEITSCHRIFT DES SÜDASIEN BÜRO NR. 29

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு பெண் தொழிலாளியின் அனுபவங்கள்

---

கேள்வி:
உங்கடை குடும்பத்தில எத்தினை பேர்?

பதில்:
நாங்கள் 9 பிள்ளையள். 6 பொம்பிளையளும், 3 ஆம்பிளையளும். மூத்தவ அக்கா. வயசு 30. இரண்டாவது அண்ணை. அவருக்கு கால் கை வழங்காது. மூண்டாவது நான்.

கேள்வி:
உங்கடை குடும்பம் ஆற்றை வருமானத்திலை சீவிக்குது?

பதில்:
அப்பா தோட்டம் வைச்சிருந்தார். அதில வாற வருமானந்தான் எங்கடை சீவியத்துக்கு கிடைக்கும்.

கேள்வி:
தோட்டத்தால வாற வருமானம் முழுக் குடும்பத்துக்கும் போதுமானதாய் இருந்ததே?

பதில்:
இல்லை. போதாததுக்கு அப்பா நல்லாய் குடிப்பார். கடன் வாங்கியும், தோட்டத்தையும், இருந்த மண் வீட்டையும் ஈடு வைச்சுத்தான் சீவியம் நடத்தினது. 85ஆம் ஆண்டில அப்பா எங்களைவிட்டிட்டு எங்கயோ போனதோட எங்கட கஷ்டம் இன்னும் கூடியிட்டுது. அம்மாவாலயும் வேலைக்குப் போகேலாது. அண்ணைக்கும் சுகயீனம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருபது வயதிலே இலங்கையிலிருந்து வெளியேறி சிங்கப்பூருக்குச் சென்று வேலை செய்த ஒரு சகோதரியின் அனுபவங்கள் பேட்டி வடிவில் தரப் பட்டுள்ளன. இச் சகோதரியை விடவும் மிகவும் மோசமான நிலைமைக ளில் வேலை செய்பவர்களும், வேலை எதுவுமே கிடைக்காத நிலையில் ஒரு நேரச் சாப்பாட்டுக்கே வழியற்ற குடும்பங்களும் உள்ளன. இலங் கையின் அரசியற், பொருளாதாரக் காரணிகளால் இளம் வயதிலேயே அந்நிய நாட்டுக்கு வேலை தேடிப் போய் கொடுமைகளை அனுபவி த்துக் கொண்டிருப்பவர்களைப் பற்றிய தகவல்களைத் தரவே இப் பேட்டி. பேட்டி தந்தவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரின் பெயர், ஊர் போன்ற விபரங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன.

–கடலோடிகள்

---

கேள்வி:
இந்த நேரத்தில நீங்க படிச்சுக்கொண்டிருந்தனீங்களா?

பதில்:
ஓம். ஓ. எல் முடிச்சிருந்தனான். 3சீயும் 3 எஸ்ஸும்தான் றிசல்ற். தொடர்ந்து படிக்கலாம். ஆனா நான் அதை விரும்பேல. ஏனென்டால் வீட்டில வேலை செய்யக்கூடிய ஒராள் நான்தான். அதால படிப்பை விட்டிட்டு வேலை தேடத் தொடங்கினன். வீட்டில எல்லாருக்கும் – நான் தொடர்ந்தும் படிக்கிறதுதான் விருப்பம். ஆனா என்ன செய்யிறது

கேள்வி:
வேலை ஏதாவது உடன கிடைச்சுதா?

பதில்:
சிங்கப்பூரில வேலை இருக்கு. செய்யப் போறியோ என்டு எங்களுக்குத் தெரிஞ்ச ஒராள் கேட்டார். பிளேற்றுக்கோ, ஏஜென்சிக்கோ குடுக்கிறதுக்கு எங்களிட்டை ஒரு சதம் கூடி இல்லையென்டோம். ஒரு செலவும் இல்லை. வேலை செய்ய ஓமென்டால் மிச்ச எல்லா ஏற்பாடும் தானே செய்து தாறதெண்டும் சொன்னார். சாப்பாட்டோட மாசம் 150 டொலர் சம்பளமாம். வேலையும் கஷ்டமில்லையாம் வீவெல்லாம் தருவினமாம் என்டெல்லாம் சொன்னார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேள்வி:
வேற நாட்டில போய் வேலை செய்யிறதுக்கு வீட்டில எல்லாரும் ஓமெண்டிட்டினமே?

பதில்:
அவை விரும்பாட்டிலும் வேற வழியில்லைத்தானே. 86ஆம் ஆண்டு சிங்கப்பூருக்கு வெளிக்கிட்டன்.

கேள்வி:
அங்க நீங்க எதிர்பார்த்த மாதிரி வேலை கிடைச்சுதா?

பதில்:
கஷ்டத்தை எதிர்பார்த்தனான் தான். ஆனா அதைவிடக் கஷ்டத்தையே அனுபவிச்சன். ஒரு கேரளக் குடும்பத்தின்ரை வீட்டிலதான் வேலை. முழு வேலையும் நான்தான் செய்யவேணும். வேலை எடுத்துத் தந்தவர் சொன்ன மாதிரி சம்பளம் தரேல. குறைச்சுத்தான் தந்தினம். அதோட ஒரு நிமிசம் கூட லீவு இல்லை. தமிழ் கதைக்கேலாது. மலையாளத்திலதான் கதைக்க வேணும்.

கேள்வி:
முழு வேலையளும் நீங்கதான் செய்ய வேணும் எண்டு சொன்னீங்க. என்னென்ன வேலையள் எண்டு கொஞ்ச வேலையளைச் சொல்லுங்களேன்?

பதில்:
வீடு கூட்டுறது, சமான்கள் துடைக்கிறது, அடுக்கிறது, சமைக்கிறது, பிள்ளைக்குப் பால் கரைச்சுக் குடுக்கிறது. இரவு 12 மணியிலயிருந்து மத்தியானம் 12 மணி வரைக்கும் இந்த வீட்டில வேலை. மத்தியானம் 12 மணியிலயிருந்து இரவு 12 மணி வரைக்கும் இந்தக் குடும்பத்தின்ரை தாய் வீட்டை போய் இதே வேலையளைச் செய்ய வேணும்.

கேள்வி:
பகலில மாதிரி இரவிலயும் கனவேலை இருக்குமா?

பதில்:
விடிய 2மணிக்கும், 4 மணிக்கும் பிள்ளைக்குப் பால் கரைச்சுக் குடுக்க வேணும். அதோட பிள்ளை இடையில எழும்பி அழுதா நித்திரையாக்க வேணும். இதால இரவில நான் நித்திரை கொள்ளுற இல்லையெண்டே சொல்லலாம். பகல் மிச்ச வேலையள் தொடங்கியிடும். சிலவேளை நாள் முழுக்க சாப்பிடாமலே வேலை செய்ய வேண்டியிருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேள்வி:
சிங்கப்பூரில வீட்டு,சமையல் வேலையளை எளிதாக்க கனக்க மின்சார உபகரணங்கள் கிடைக்குமே. உங்களின்ரை எஜமானர்மார் அதுகளை வாங்கித் தரேலயா?

பதில்:
இல்லை. அவையளுக்கு எல்லாம் கையாலதான் செய்து குடுக்கவேணும். உதாரணமா சமையலில மிக்சர் பாவிச்சு அரைக்கக்கூடாது. அரைக்கிறது, பொரிக்கிறது எல்லாம் கையாலதான். இலங்கையில - செய்யிற மாதிரிதான் செய்யிறது. மெசின் பாவிக்காம கையால செய்தாதான் ரேஸ்ற்ருய் இருக்குமாம். ஒண்டுக்குமே மெசின் பாவிக்க விடமாட்டினம்.

கேள்வி:
உங்கடை எஜமானர்கள் உங்களோட எப்பிடிப் பழகுவினம்?

பதில்:
எப்பவும் ஏசிக்கொண்டிருப்பினம். எரிஞ்சு விழுவினம். ஒருநாள் அப்பம் சுட்டுக்கொண்டிருந்தனான். நேரம் போட்டுதெண்டு சொல்லி வீட்டுக்கார மனிசி கொதி எண்ணெயை எடுத்து எனக்கு மேல ஊத்திப் போட்டுது. உடம்பெல்லாம் பொங்கியிட்டுது. இன்னொருநாள் மரக்கறி வெட்டிக்கொண்டிருக்கேக்க கெதியாய் வெட்டேலயெண்டு சொல்லி மனிசி கத்தியால கையில அடிக்க, விரல் வெட்டுப்பட்டுப் போச்சு.

கேள்வி:
உங்களுக்கு லீவே தரேல்லையெண்டு சொன்னீங்க. தொடர்ந்தும் இதே நிலை தானே?

பதில்:
வேலைக்குச் சேந்து 2 வருசத்துக்குப் பிறகு மாசத்தில 2 நாள் மத்தியானம் 11 மணியிலயிருந்து பின்னேரம் 5 மணிவரைக்கும் லீவு தந்தினம்.

கேள்வி:
இந்த லீவு நேரத்தில என்ன செய்வீங்க?

பதில்:
சைவக் கோயில் ஒண்டிருக்கு. வேற வேற வீடுகளில வேலை செய்யிற தமிழ்ப் பொம்பிளையளும் அங்க வருவினம். எல்லாரும் எங்கட கஷ்டத்தை ஒருதருக்கு ஒருதர் சொல்லிச் சொல்லி அழுவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ன செய்யிறது? எல்லாருக்கும் ஒரே வீட்டுக் கஷ்டம் தான். அதால எல்லாத்தையும் பல்லைக் கடிச்சுத் தாங்கிக்கொண்டு வேலை செய்வம்.

கேள்வி:
சிங்கப்பூரில உங்களுக்குப் பிடிச்சதெண்டு ஏதாவது இருக்குதா?

பதில்:
ஒண்டுமே பிடிக்கேல. எப்ப இதைவிட்டிட்டு ஓடுவம் எண்டிருந்தது. வேலை செய்த வீட்டுக்காறர் கொலையும் செய்யக் கூடியவை. அவ்வளவு கொடுமையள். வேற நாடுகளுக்கு போகவெண்டு சிங்கப்பூர் வாற தமிழாக்கள் எல்லாம் இடமும் சுத்திப் பாக்கினம். ஆனா நான் பாத்தது வேலை செய்யிற வீடும், சைவக் கோயிலும்தான்.



இந்த முறையும் எங்கடை தொழிற் சங்கம் இந்தியாவிலயிருந்து பாட்டுக் காறரையும், டான்ஸ்காறரையும் கூப் பிட்டு மே தினத்தைச் சோக்காய்க் கொண்டாடிச்சுது.

ஒவ்வொரு வருசமும் உப்பிடி பிரமாண்டமாய் செலவழிச்சுக் கொண்டாட இலச்சக் கணக்கில காசு வேணுமே

அது எங்கட சங்கத்துக்கு ஒரு பிரச்சினையே. தொழிலாளரிட்டை இருந்து அதுக்கு இதுக்கு எண்டு வறகின காசு எக்கச்சக்கமாய் கிடக்கு. அதுகளை இப்பிடியும் செலவழிக்காட்டித் தலைவர்மாற்றை கறுப்புப் பணமெல்லோ கூடிவிடும். பிறகு அதையென்ன செய்யிறது?

—இன்னன்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேள்வி:
எப்ப சிங்கப்பூரை விட்டு வெளியேற முடிஞ்சிது?

பதில்:
வீட்டுக் கடன் எல்லாம் அடைச்சு, மண் வீட்டையும் ஈட்டால மீண்டா பிறகு இனியும் தாங்கேலாதெண்ட நிலைமையில இலங்கைக்கு வந்திட்டேன்.

கேள்வி:
இலங்கயில பிறகும் வேலை கிடைச்சுதா?

பதில்:
கொஞ்சக் காலம் ரவல்ஸ் ஏஜென்சி ஒண்டில வேலை செய்தன். ஆறு அக்கான்ரை கலியாணத்துக்கு சீதனமாய் குடுக்க காசு தேவையாயிருந்திது. என்ரை சம்பள்ம் இதுக்குப் போதுமானதாய் இருக்கேலை. அதால திரும்பியும் வெளிநாட்டுக்குப் போக விரும்பினன். நிச்சயமாய் சிங்கப்பூருக்கு இல்லை. நான் வேலை செய்த ரவல்ஸ் ஏஜென்சியின்ரை உதவியால இந்த வருசம் மார்ச் மாதம் ஜேர்மெனிக்கு வந்து சேர்ந்தன்.

கேள்வி:
சிங்கப்பூரிலயிருந்து தப்பி இப்ப அரசியல் தஞ்சம் கடுமையாயிருக்கிற நாட்டில வந்து அம்பிட்டிருக்கிறீங்கள். இங்க வேலை தேடேக்க என்ன விருப்பங்கள் வைச்சிருக்கிறங்க?

பதில்:
அக்காவின்ரை கலியாணம், மண் வீட்டை இடிச்சு கல்வீடு கட்டுறது..

கேள்வி:
உங்களுக்கு இப்ப எத்தினை வயசு?

பதில்:
இருபத்தி நாலு.

www.tamilarangam.net

# மீண்டும் அஸ்தமனங்கள்

எதிர்காலத்தில்
இதயங்களாக
இருக்க வேண்டியவர்கள்
நீங்கள்
நிகழ்காலத்தின்
நிலச்சகதிக்குள்
சிக்கிக் கொண்டோம்
நாளைய தளிர்கள்
இன்றே சருகுகள்
ஆக்கப்பட்டன
அன்று
எம்
மூதாதையர்
மூளையுடன்
நடந்திருந்தால்
இன்று
எம்
முதுகெலும்பில்
இவ்வளவு
சுமை
ஏறி
இருக்காது
நாம்
83 ல்
இரத்தத்தில்
முழுகிய
பின்

எத்தனை நாள்
குளிக்காமல்
இருந்திருப்போம்
எமது
தேசத்திற்காக
பாடசாலைப்
புத்தகத்தில்
புதுக்கவிதை
பதிக்க
வேண்டிய
நாட்களிலே
எம்
முதுகுகளில்
அல்லவா
முழுப் பாரமும்
இருந்தது
எமது
தேசத்தின்
சந்தோசத்திற்காய்
தினமும்
தேய்ந்தது
எங்கள்
தேகம்
“எ லாம்”
வைத்து
எழுந்திருந்தது
படிக்கவில்லை

நாம்
இருண்ட
சென்றிகளில்
இதயத்தின்
ஒலிகூட
இயந்திரத்தின்
ஒலியாக
எத்தனை
நாள்
கிடந்திருப்போம்
கல்லூரி
காதல்களும்
கவிதைபாடும்
வரவுகளும்
காத்திருக்கும்
வேளையிலே
நாம்
கல்லறையின்
வாசலிலே
காற்றுடனே
காத்திருந்தோம்
பல
துறந்து
சுற்றங்கள்
பல
மறந்து
சோகங்கள்
பல
சுமந்து
சுதந்திரத்தாய்
வருவாளென
சுமையுடனே
காத்திருந்தோம்
பாதி வழி
வந்ததாய்
மீதி வழி
காணவில்லை
ஆனால்,
துறந்த சொந்தம்
வரவு மில்லை
சுதந்திரமும்
பெறவுமில்லை
இளமை
விதை
தூவி
இனிமை மழை
பொழிந்து
வாலிபக் கொடி
காட்டி
வலிந்தழைத்தோம்
மரணத்தை
நாங்களும்
படித்திருந்தால்
பட்டம்
பல
பெற்றிருப்போம்
நாம்
ஆனால்
படிக்கவில்லை.

கோபாலகிருஷ்ணன்

கோபாலின் இழப்

எமது அஞ்சலியை செலுத்… அவரை நினை…

www.tamilarangam.net

## பறித்தபின் விரட்டுகிறார்கள்

மேற்கு ஜேர்மெனியின் வெளிநாட்டவர்களுக்கான அடிப்படைச் சட்டம் பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த வருடம் முழுமையாக மாற்றப்பட்டுள்ளது. ஆளும் கட்சிகளினால் ஏற்படுத்தப்பட்ட இம் மாற்றம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு 1991 ஜனவரி முதல் புதிய சட்டங்கள் அமுலுக்கு வந்துள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் இந்நாட்டைப்புனருத்தாரணம் செய்வதற்காக விருந்தினராக வரவேற்கப்பட்ட துருக்கி நாட்டுத் தொழிலாளர்களிலிருந்து, ஏகாதிபத்திய, மேற்கைரோப்பிய நாடுகளின் சுரண்டல்களினாலும், யுத்த ஆக்குவிப்புகளினாலும் அரசியல் தஞ்சம் கோரி வந்த மூன்றாம் உலக நாட்டு அகதிகள் வரை எல்லா வெளிநாட்டவரையும் இங்கிருந்து வேண்டத்தகாதவர்களாகத் துரத்தியடிப்பதற்கு ஏதுவாகவே இச் சட்டங்களில் புதிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மனிதாபிமானமற்ற இந் நடவடிக்கைகளை எதிர்த்து மனிதாபிமானமுள்ள ஜேர்மென் மக்களும், பாதிக்கப்படும் வெளிநாட்டவர்களும் ஊர்வலங்கள், கூட்டங்கள், உண்ணாவிரதங்கள், சுவரொட்டி, துண்

## அகதிகள் மீது தாக்குதல்கள்

சுவிசிலுள்ள வெளிநாட்டவர்களுக்கெதிரான இனவெறித் தாக்குதல்கள் சமீபகாலமாக மிகவும் உக்கிரமடைந்துள்ளன. இதில் பொலிசாரும் கூட்டுச் சேர்ந்துள்ளமை தற்போது இனங்காணப்பட்டு வருகிறது.

www.tamilarangam.net

டுப் பிரசுரப் பிரச்சாரங்கள் போன்ற நடவடிக்கைகளை மேற் - கொண்டு வருகின்றனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் யாவற்றையும் இங்குள்ள அநேகமான பொதுசனத்தொடர்புச் சாதனங்களும் வழமை போல அரசுக்குச் சார்பாக இருட்டடிப்புச் செய்து வருகின்றன.

வளர்ந்துவரும் புதிய நாஸிகளின் நிறவெறி, இனவெறி எதிர்ப்புகள் ஏற்கெனவே இங்கிருக்கும் வெளிநாட்டவர்களுடன் முட்டி மோதிக்கொண்டிருக்கையில், இப் புதிய சட்டங்கள் முதுகுப்புறமிருந்து வெளிநாட்டவரைத் தாக்குகின்றன.

தமது நாட்டை முன்னேற்றுவதற்காக 'தொழிலாள விருந்தினர்கள்', 'அரசியல் தஞ்சம் கோரிய அகதிகள்' என்ற பெயர்களில் ஒரு கோடிக்கும் அதிகமான வெளிநாட்டவர்களின் உடல் உழைப்பைக் குறைந்த கூலியிலும், கூலியில்லாமலும் பறித்துக் கொண்ட இந் நாட்டின் ஆளும் கட்சிகள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டதும், அவர்களை 'வந்தேறு குடிகள்' என்ற பெயரில் இந் நாட்டைவிட்டு வலுக்கட்டாயமாகத் துரத்த முயற்சிக்கும் இந்நடவடிக்கைகளை, இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட வேண்டும் என்ற நோக்கத்துக்காக இல்லாவிடினும் 'பறித்தபின் விரட்டும்' உண்மை நிலையை ஜேர்மெனிய மக்களுக்கும், ஏனையவர்களுக்கும் தெரிவிப்பதற்காகவேனும் எதிர்க்க வேண்டியது தவிர்க்க முடியததாகிறது.

இந்த எதிர்ப்புகள் தங்க வந்த இடத்தில் மடத்தைக் கட்டுவது என்ற கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாமல், முதலாளித்துவ சுரண்டல் பொறி அமைப்புக்குள் சிக்கிக் கொண்டவர்களின் அவல நிலையை எடுத்துக் காட்டுவதாக இருப்பதில் எந்தவித கருத்துவேற்றுமையும் இருக்க முடியாது.

19.03.90 திங்கட் கிழமை இரவு பதினொரு மணியளவில் றைன் பெல்டன் நகர பிரதான வீதியில் ஒரு இலங்கையர் சில (சுவிஸ்நாட்டு) இனந்தெரியாத நபர்களால் பலமாகத் தாக்கப்பட்டார். உடலில் பல கத்திக்குத்துகளுக்கு இலக்காகிய இவரின் வலதுகையும், சுவாசப்பையும் பலமாகத் தாக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலையின் தீவிர கண்காணிப்புப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டுவரும் இவரின் உடல்நிலை மிகமோசமான நிலையிலேயே இருக்கிறது.

www.tamilarangam.net

21.03.90 புதன்கிழமை பிற்பகல் 2மணியளவில் லௌசான் நகரில் நான்கு இனந்தெரியாத (சுவிஸ்நாட்டு) நபர்கள் கத்தியுடன் இலங்கையர் வாழும் வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டினர் அங்கிருந்த பெண் அவர்களைக் கண்டவுடன் கதவைத் திறவாது தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயற்சித்தபோது அந் நபர்கள் கதவை உடைத்து உள்ளே சென்று அப்பெண்ணின் கழுத்தைத் திருகியதோடு, அங்கிருந்த பொருட்களையும் உடைத்துச் சேதப்படுத்தினர்.

23.03.90 வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் - லௌசான் நகரில் ஒரு இலங்கையர் மாற்று பஸ் எடுப்பதற்காக பயணம் செய்த பஸ்ஸிலிருந்து இறங்கியபோது அவருடன் இறங்கிய 3 இனந்தெரியாத நபர்கள் பஸ் அந்த இடத்தைவிட்டகன்றதும் அந்த இலங்கையரை இழுத்துச் சென்று பலமாகத்தாக்கினார்கள். இதனால் அவர் சுயநினைவிழந்து வீதியில் கிடந்தார்

இப்படியான பல சம்பவங்கள் வெளிநாட்டவருக்கு எதிரான கும்பல்களால் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முன்பு இக் கும்பல்கள் - வெளிநாட்டவர்கள் வாழும் விடுதிகளையும், நபர்களையும் தாக்கிவந்தார்கள். தற்போது குறிப்பிட்டுத் தனிநபர்களையே தாக்கிவருகிறார்கள்.

இதனால் இந்நடவடிக்கைகளையே பொலிசார் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு இவை தனிப்பட்ட பிரச்சினைகளின் வெளிப்பாடுகளே தவிர வெளிநாட்டவர்களுக்கெதிரான நிறவெறித் தாக்குதல்களல்ல எனக் கூறிவருகின்றனர்.

அரசியல் தஞ்சம் கோரிய நாட்டில் நடைபெறும் இப்படியான இனவெறித் தாக்குதல் சம்பவங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் சுவிஸ் நாட்டுத் தெருக்களிலும் அனாதைப் பிணங்கள் கிடக்கலாம்

நமது நிருபர்கள்

8, 9ஆம் பக்கங்களில் பிரசுரமாகியுள்ள கவிதை 13.05.89இல் இந்திய இராணுவக் கூட்டுக் கும்பல்களால்படுகொலை செய்யப்பட்ட யாழ் மத்திய கல்லூரி மாணவனால் எழுதப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியச் சந்திப்பு

## இரண்டு பார்வைகள்:

எமது சமூகத்தின் விடுதலையை நோக்கியதான பல்வேறு நடவடிக்கைகள் எம்மத்தியில் நடைபெற்று வருகின்றன. சமூக நலனில் அக்கறையுள்ள ஒவ்வொருவரும் இவற்றுக்காக உழைப்பதில் அக்கறையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

மேற்படி நடவடிக்கைகளில் ஒன்றுதான் இந்த இலக்கியச் சந்திப்பாகும்.

இச் சந்திப்புகளின் பல்வேறு நிகழ்ச்சிகளினூடாகவும் சமூக மாற்றத்திற்கு வழிவகுக்கும் முற்போக்குக் கருத்துகள் வைக்கப்படுவதும், அவை விமர்சிக்கப்படுவதும் நடைபெற்றுவருகின்றன.

மேற்படி அனைத்து விடயங்களிலும் பெண்களாகிய எமக்கும் பங்குண்டு என்பதை நாம் மறந்துவிட முடியாது. பெண்நிலைவாதம் தவிர ஏனைய விடயங்கள் எமக்குப் புறம்பானது என்று விட்டுவிடுவதும் தவறாகும்.

பெண்ணடிமைத்தனத்திற்கு எதிரான விடயங்களைத் தெரிந்துகொள்வதும், அவற்றால் தெளிவு பெறுவதும் நன்றே. பெண்ணடிமை நிலைக்கெதிரான செயல்முறைகளில் அணிதிரண்டு பெண்ணிலைவாதம் பற்றி எடுத்துரைப்பது எமது குறிக்கோள்களில் ஒன்றாகும்.

இவற்றைச் சரிவர மேற்கொள்ள வேண்டுமென்றால் பெண்களாகிய நாங்கள் ஸ்தாபனமயப்படவேண்டும்.

கடந்த இலக்கியச் சந்திப்பில் 'பெண்நிலைவாதம்' பற்றிய கருத்துகள் பரிமாறப்பட்டபோது, ஆண்களைப் பகையாளர்களாகக் கருதுவதும், பெண்நிலைவாதம் என்பது சமூகத்தின் ஏனைய விடயங்களோடு சம்பந்தமில்லாதது போன்றதுமான கருத்துகளைக் கொண்டதான தொனிப்பு இருந்தது.

ஒதுக்கப்பட்ட நேரத்தை விட அதிகமான நேரங்களைத் தமது நிகழ்ச்சிக்கு எடுத்துக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டபோதும், தெளிவான கருத்துகள் முன்வைக்கப்படவில்லை.

இதனைச் சுட்டிக் காட்டுவது தவறாக இருக்கலாமோவென்ற உள்நோக்கோடு ஆண்கள் பேசாமலிருந்ததை அவதானிக்க கூடியதாகவிருந்தது. இதனைப் பெண்ணாதிக்கவாதம் என்று கருதமுடியாதபோதும் ஆண்களிடமிருந்து இப்போராட்ட இடைவெளியைக் கூட்ட வாய்ப்புண்டல்லவா.

அத்தோடு பெண்ணடிமைத்தனத்தை வலியுறுத்துவதற்கான ஒவ்வொரு நிகழ்வையும் நியாயமான முறையில் எதிர்க்க வேண்டிய கடமையுள்ளவர்களாக நாமிருக்கிறோம் என்பதை மறுக்க முடியாது. அதேவேளையில் வரட்டுத்தனமானதும், முரட்டுத்தனமானதுமான சில நடவடிக்கைகள் மூலம் ஏனைய பெண்கள் மத்தியில் உள்ள பெண்ணடிமைத்தனத்திற்குச் சாதகமான அம்சங்களை எந்தளவிற்கு மாற்றீடு செய்ய முடியும் என்பதும் கேள்விக்குறியாக இருக்கின்றது.

சில விட்டுக் கொடுப்புகளோடுதான் நாம் அவர்கள் மத்தியில் சென்று ஐக்கியப்படமுடியும்.

இவைகளை எழுதுவதோடும், விமர்சிப்பதோடும் நின்றுவிடாமல், செயற்பாட்டிலும் முன்னெடுக்க வேண்டும்.

விஜி

---

07.04.90இல் கிறபெல்ட் நகரில் சுமார் 100க்கும் அதிகமானோர் கலந்துகொண்ட 7வது இலக்கியச் சந்திப்பு வழக்கமான சந்திப்புகளிலிருந்து வேறுபட்டதாக, பெண்களின் அதிக பங்களிப்புடன் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்ச்சி மேற்கு ஜேர்மனித் தமிழ் சஞ்சிகைகள் ஆக்கங்களில் பெண்ணிலைவாதக் கருத்துகள். இன்பராணியும், கமலாவும் இரண்டு கட்டுரைகளை வாசித்தார்கள். கமலா வாசித்த கட்டுரையை எழுதியவரின் பெயர் சொல்லப்படவில்லை. "ஆண்களைப் போலப் பெண்கள் தயாரித்துவைத்து மேடைப்பேச்சு பேசுவதில்லை" என்று இன்பராணி ஆரம்பத்திலேய குறிப்பிட்டாலும், வாசிப்பதை அனைவரும் இலகுவாக விளங்கிக்கொள்ள ஓரளவேனும் பேச்சுக் கவர்ச்சி இருந்தால் சிறப்பானதாகவேயிருக்கும். பெண்ணடிமைக்கு வக்காலத்து வேண்டும் ஆக்கங்களையும் இவற்றுக்கெதிரான படைப்புகளையும் இரண்டு கட்டுரைகளும் தரம் பிரித்துக் காட்டின.

எல்லா இலக்கியச் சந்திப்புகளிலும் இடம்பெறும் வாசகர் விமர்சனங்கள் வரவர கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலையில் போய்க் கொண்டிருப்பதை அனைத்துச் சந்திப்புகளிலும் கலந்துகொண்டவர்களால் அறிந்துகொள்ள முடியும்.

இலக்கியச் சந்திப்பின் பிரதான அம்சமாக ஆரம்பச்சந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிப்புகளிலிருந்த விமர்சனங்கள் என்று — நேரடியாக முகம் கொடுக்க முடியாதவர்களை புறமுதுகிட வைத்த — இந்த நிகழ்ச்சி இப்போது சும்மா பேச்சுக்கென்றாகிவிட்டது. அதிலும் சஞ்சிகையாசிரியர்களே ஏனைய சஞ்சிகைகளை விமர்சிக்க வேண்டிய நிலை. அதுவும் ஒருசில சஞ்சிகையாளர்கள்தான் எப்போதும் முனைப்பாக இருக்கிறார்கள். தூண்டில் உட்படப் பலர் எழுத்து மட்டுந்தான் எங்களுக்குசரி என்பதுபோல மௌன விரதம் தான்.

எனவே இலக்கியச் சந்திப்பை பூரணமாக பயனுள்ளதாக்க மீண்டும் காரசாரமான விமர்சனங்கள், விவாதங்கள் வரவேண்டும். வாசகர்களும், சஞ்சிகையாளர்களும் கவனமெடுப்பார்களாக. இதையடுத்த ஆசிரியர், ஆக்கதாரர்கள் பதில் பற்றிசொல்லவே தேவையில்லை.

இந்தியாவில் பெண்களின் நிலை பற்றிய தொலைக்காட்சி விவரணப் படமொன்று காட்டப்பட்டது. சூழ்நிலைக்கேற்றதாக அமையாமல் போய்விட்டது. பலர் இதில் ஒட்டாமல் தங்களுக்குள் ஊர்க்கதைகள் கதைத்துக்கொண்டும், கொட்டாவி விட்டுக்கொண்டுமிருந்தது அவர்களுடைய தவறு மட்டுமல்ல. பல முக்கிய விடயங்களை உள்ளடக்கியிருந்த இவ்விவரணப்படம் குறிப்பிட்ட எண்ணிக்கையை உள்ளடக்கிய பார்வையாளர்கள் இருக்கும்போது பிரயோசனத்தைத் தரும்.

மேற்கு ஜேர்மனித்தமிழ் சஞ்சிகைகளில் வெளியான சிறுகதைகளில் சமூக நோக்கு என்ற தலைப்பில் சுகனும், உமாவும் தங்கள் கட்டுரைகளை வாசித்தனர். சுகனின் வார்த்தைப் பிரயோகங்களும், உமாவின் வாசிப்பு முறையும் கேட்பவர்களுக்கு பல சிரமங்களை உண்டுபண்ணின.

தங்கள் கருத்துகள் எல்லோரிடமும் சென்றடைய வேண்டும் என்றால் மேற்சொன்னவற்றிலும் அக்கறை காட்டலாம் தானே? உமாவின் கருத்துகளுக்குப் பின் பிரச்சாரம் இலக்கியமாகுமா? இலக்கியத்தில் பிரச்சாரம் செய்யலாமா? என்று தொன்றுதொட்டு எழுந்துவரும் சர்ச்சை இங்கும் எழுந்து நேரம் போதாதென்ற வழக்கமான குறுக்கீட்டுடன் அமுங்கிவிட்டது.

இக்குறை தொடராவண்ணம், நிகழ்ச்சி நிரல்களில் குறிக்கப்படும் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் பற்றிய அன்றைய சந்திப்புகளில் இடம்பெறும் விமர்சனங்கள், கலந்துரையாடல்களுக்கு முற்கூட்டியே அதிக நேரம் ஒதுக்கிவைத்தால் என்ன? நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் பெரும்பாலானவர்களின் பங்களிப்பின்றி எந்த நிகழ்ச்சிகளும் முழுமையடையாது.

'சிறுவர் அமுதம்' என்ற சிறுவர் சஞ்சிகை பற்றி தனது கருத்துகளை நகைச்சுவையாக நித்தி தெரிவித்தார்.

சொற்சிலம்பம், வசா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்ணடிமை பற்றித் தொடர்ந்தும் விவாதித்துக்கொண்டுதானிருக்கிறோம். இப்படியே தொடர்ந்தும் விவாதித்துக்கொண்டிருப்பதுதான் நடக்கப் போகிறதா?

—பத்மமனோகரன்

அடிப்படை வசதிகள் சில பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் பல பெண்கள் அடுத்தபடிக்குப் போகத் தயாரில்லை. போலியான சொகுசும், வசதிகளும் இவர்களின் கண்களை மறைக்கிறது.

—தேவிகா

நடைமுறையில் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளையிட்டு நடவடிக்கைகளை எடுக்க முயலாது, இலங்கையில் இருக்கும் பாட்டாளி வர்க்கத்தைப் பற்றி கண்ணீர் விடுவது ஏமாற்றுத்தனமே. 10,000மைல்களுக்கப்பாலுள்ள நாங்கள் இலங்கையின் யதார்த்த நிலைமையை உணருகிறோமா?

—குமார்

த்தை விளையாட்டு என்ற ஜனரஞ்சகப்படுத்தலுடன் தமிழகத்தில் அதிகமான கவிதைகள் தோன்றுகையில் பேச்சோசைப் பண்பு, எளிமை, யதார்த்தம், சம்பவச் செறிவு, யதார்த்த சூழற் பின்னணி ஆகியவற்றுடன் அதிகமான கவிதைகள் ஈழத்தில் தோன்றின

என 'புதுக் கவிதையும், புதுப் பிரக்ஞையும்' தலைப்பில் பேசிய குமரன் தெரிவித்தார். புதுக் கவிதைகளிலிருந்து புலம் பெயர்ந்தோர்களது கவிதைவரை விபரித்த குமரன் நோர்வேயில் — வெளியிடப்பட்ட 'துருவச் சுவடுகள்' கவிதைத் தொகுப்பை ஆதாரமாக எடுத்துக் கொண்டார். இவருடைய சரளமானபேச்சு நடை கேட்பவரின் சலிப்பை விரட்டியது.

'ஐக்கியமும், தேடலும்' என்ற தலைப்பில் குமார் சற்றுக் கனமான விடயத்தைத் தொட்டிருந்தார். சுவடுகள் சஞ்சிகையை அறிமுகம் செய்தபின், இலக்கியம் மக்கள் சார்பானதா? அல்லது கோட்பாடு சார்பானதா? தேடலினூடாக ஐக்கியமா? அல்லது ஐக்கியத்தினூடாகத் தேடலா? என்று பல கேள்விகளை எழுப்பி கொஞ்சம் கடினமான பதங்களோடு உரையாற்றியபோது, கேட்டுக்கொண்டிருந்த எங்களுக்குக் குழப்பம் ஏற்பட்டதைச் — சொல்லியாக வேண்டும். இவரின் உரை ஏதாவது சஞ்சிகையில் கட்டுரை வடிவில் வெளி வந்தால் அதன் கருத்துகளை உள் வாங்கவும், விமர்சிக்கவும் ஏதுவாகவிருக்குமே!

(தொடர்ச்சி 33 ஆம் பக்கத்தில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு திறந்த 1990



(கலம் 28 இன் தொடர்ச்சி)

வயோதியர்களும், இளைஞர்களும் அச் சுவரை சுத்தியலால் உடைத்து அந்தத் துண்டுகளை 3 மார்க்குகள் படி விற்றுக் கொண்டிருந்தார்கள்.

மேற்கு ஜேர்மெனியின் அமைச்சர்களே இக் கல்லுகளைத் தாம் விஜயம் செய்யும் நாடுகளுக்கு எடுத்துச் சென்று அன்பளிப்பாகக் கொடுத்ததும் குறிப்பிடத்தக்கது.

சுவர் ஓரமாக நாம் நடந்து சென்றபோது "வருங் காலத்தில் மனிதனை செயற்கை முறையில் பிரிக்கக் கூடாது" என்ற சுலோக அட்டையைத்தாங்கியபடி ஒரு அமெரிக்கர் நிற்பதைக் கண்டோம்.

அவரிடம் " நீங்கள் வடக்குத் தெற்காக கொரியாவை அல்லது தென் ஆபிரிக்காவின் கறுப்பு இனத்தவரை பிரித்து வைத்துள்ள நிலைமையையா இப்படி குறிப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டபோது அவர் இந்த நாடுகளையே அறியாதவர்போல் 'திகைப்படைந்து' நின்றார்.

மதிலைச் சுற்றிப் பார்த்தபின் 'நுழைவுக்' கட்டணமாக 5 மார்க் கொடுத்துவிட்டு கிழக்கு பேர்லினுக்குள் நுழைந்தோம்.

விசாலமான வீதிகளும் நெருக்கடியற்ற வீடுகளும் பார்வையில் பதிந்தன.

ஓரிடத்திலிருந்து காதைப் பிளக்கும் இசை வந்து கொண்டிருந்தது. அந்த திசையை நோக்கிச் சென்று இசை நிகழ்ச்சி நடந்துகொண்டிருந்த சதுக்கத்தையடைந்தோம்.

அரங்குக்கு வெளியே வை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்கப்பட்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டிகளில் உள்ளே நடந்துகொண்டிருக்கும் இசை நிகழ்ச்சியைப் பலர் பார்த்துக்கொண்டிருந்தனர்.

பேர்ண் ஸ்ரைன் எனப்படும் இசைக் குழுவினரின் இவ்விசை நிகழ்ச்சி இதுவே முதல் தடவையாக கிழக்கு ஜேர்மெனியில் நடைபெறுவதாகவும், மண்டபம் நிரம்பிவிட்டதால் வெளியேயிருந்து பார்க்க இந்த வசதி செய்யப்பட்டிருப்பதாகவும் எமக்கருகில் நின்ற ஒரு கிழக்கு ஜேர்மெனியர் தெரிவித்தார்.

## கரன்

உள்ளே சென்று நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு கட்டணம் அதிகமா? என்று அவரைக் கேட்டபோது, அப்படி அதிகமில்லை- என்றும், மண்டபம் நிரம்பியதால் தான் தாம் வெளியில் நின்று பார்ப்பதாகவும் சொன்னார்.

இசை நிகழ்ச்சியை நடத்திக்கொண்டிருந்த பேர்ண்ஸ்ரைன் கிட்லரின் அநுதாபி எனவும், ஜேர்மெனியைப் பிரித்த பாசிசத்தின் மேல் பழியைப் போடாமல் மதில் மேல் அப் பழியைப் போடுகிறார் என்றும் எம்முடன் வந்த நண்பர்களில் ஒருவர் கூறினார்.

கிழக்கு ஜேர்மெனியில் சிலருடன் உரையாடியபோது அவர்கள் தமது பொருளாதாரத்தைத்தான் மேம்படுத்த வேண்டுமென்று விரும்புகிறார்களே தவிர பொருளாதார ஏற்றத்தாழ்வை விரும்பவில்லை என்பதை அறிய முடிந்தது. சூழல் அசுத்தமடைவது பற்றியும் அவர்கள் அதிகம் சிந்திப்பதையும் கண்டுகொள்ள முடிந்தது.

"நீங்கள் மேற்கு ஜேர்மனிக்குச் செல்வீர்களா?" என்று கேட்டபோது, "நான் கிழக்கு ஜேர்மெனியிலேயே பிறந்தவன். இங்கு நான் பட்டினி கிடக்கவில்லை. நான் இறக்கும்வரை இங்கேயே இருப்பேன். எமக்கு பாசிசவாதிகள் தேவையில்லை" என்று பதிலளித்தார்.

நகரைச் சுற்றிப் பார்க்கும் போது ரெலிவிசன் கோபுரத்தருகே பொருட்காட்சி ஒன்று நடந்துகொண்டிருந்தது. அண்மையில் கிழக்கு ஜேர்மென் அரசை எதிர்த்து நடாத்தப்பட்ட ஊர்வலங்களில் கொண்டு செல்லப்பட்ட சுலோக அட்டைகள் அங்கு வைக்கப்பட்டிருந்தன.

'அடுத்து என்ன செய்ய வேண்டும்?' என்று லெனின் யோசிப்பதாக எழுதப்பட்ட சுலோக அட்டையும் அவற்றில் ஒன்று.

"மேற்கில் உள்ளதைப் போன்றோ, கிழக்கில் உள்ளதைப் போன்றோ இல்லாத மூன்றாவது வழியே எங்களுக்குத் தேவைப்படுகிறது" என்று அங்கு நின்ற ஒருவர் கூறினார். மேற்கில் உள்ள பொருளாதார வளர்ச்சியும், கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முக்கில் உள்ள சமபங்கீடும் கலந்த ஒரு வழியையேதான் இப்படிக் கருதுவதாக அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு பேர்லினை விட்டு திரும்பவும் மேற்கு பேர்லினுக்கு வந்ததும் அங்கேயுள்ள ஒரு அகதியுடன் உரையாடினேம்.

"எங்களைப் பொறுத்த வரையில் மேற்கு ஜேர்மெனியில் ஒவ்வொரு நகரைச் சுற்றியும் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. கண்ணால் பார்க்க முடியாத இச் சுவர்கள் கிழக்கு-மேற்கு ஜேர்மெனிகளுக்கிடையில் உள்ள கண்ணால் காணக்கூடிய சுவரைவிட மிக கொடுமையானவை. இந்த சுவர்களைப் பற்றி மட்டும் ஏன் எவரும் இப்படிக் குரல் எழுப்பவில்லை?" என்று கேட்ட அரசியல் தஞ்சம் கோரியவர் அங்குள்ள அரசியல் தஞ்சச் சட்டங்களின் கொடுமைகளை உருக்கமாகவும், சுருக்கமாகவும் குறிப்பிட்டார்.

எமது பயணத்தை முடித்துக்கொண்டு நாம் வீடு திரும்பியபோது "ஒரு திறந்த1990" என்ற தலைப்புடனை ஒரு புது வருட வாழ்த்து மடல் எனக்கு வந்திருந்தது.

அந்த வாழ்த்து மடலை அனுப்பியவர், அகதிகளை வரவிடு


(தொடர்ச்சி 41 ஆம் பக்கத்தில்)



# நூல் அறிமுகம்

பள்ளம்

போராடுவதற்காக கற்றுக்கொள்கிறோம
கற்றுக்கொள்வதற்காக போராடுகிறோம



தொடர்புகட்கு:

MR K KANAGASINGAM
39 RUE DE LA JONQUIERE
75017 PARIS
FRANCE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

02.04.90 வீரகேசரி

இந்தியா விட்ட தவறை இலங்கையரசு செய்யாது. இலங்கை ஜனாதிபதியுடன் இப்போது நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் பரம திருப்திகரமாகவும், நம்பிக்கையளிப்பதாகவும் உள்ளது. நாம் இந்திய அரசுக்கு விரோதிகள் அல்ல. புரிந்துணர்வின் அடிப்படையில் புதிய இந்திய அரசு எமது இயக்கத்துடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ள முன்வர வேண்டும். ஜனாதிபதி பிரேமதாசவின் புதிய துணிச்சலான அணுகுமுறை காரணமாகவே இன்று இந்த நல்ல சூழ்நிலை ஏற்பட்டுள்ளது - பிரபாகரன்.

ம் கடத்தப்பட்டார்கள். இராணுவத்தலும், பாரா இராணுவக் குழுக்களினாலும் கடத்தப்படுவது நிறுத்தப்படவேண்டும். எமது அங்கத்தவர்களின் கொலைகள் பாரா இராணுவக் குழுக்களால் நடாத்தப்பட்டன. - சட்டத்தரணிகள் சங்கத் தலைவர்

நமது இளைஞர்களை வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பிப் போராடியதினால் அபிவிருத்திக்குச் செலவிடவேண்டிய பணத்தை பாதுகாப்புக்குச் செலவிட வேண்டியதாயிற்று. - பெருந்தோட்டத்துறை அமைச்சர்




அக்கரைப்பற்றுப் பொலிஸ் பிரிவில் - கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

03.04.90 வீரகேசரி

தோட்டக் காணிகளை தோட்டத்தொழிலாளர்கள் அல்லாத வெளியாருக்குப் பிரித்துக் கொடுப்பதில் அதிகாரிகள் முனைப்பாக இருக்கின்றனர்.

04 04.90 வீரகேசரி

எமது அங்கத்தவர்களில் பலர் இந்த வருடத்தில் நம்பர் தகடு இல்லாதவாகனங்களில் வரும் சாதாரண உடைதரித்த ஆயுதந் தாங்கியோராலும், பாதுகாப்புச் சேவையில் உள்ளாரோலாலு

05.04.90 வீரகேசரி

காத்திரமற்ற காரணங்களுக்காக கர்த்தால், பகிஷ்கரிப்பு என அடிக்கடி - பாடசாலைகள் மூடப்படுகின்றன. இதற்கான அழைப்புகளில் உத்தரவாதம் உள்ளதா என மாணவர்கள் ஆராயாமல் அதற்குக் கட்டுப்படுகின்றனர். அற்பகாரணங்களுக்காக மாணவர் கட்டுப்படாது பொறுப்புடன் சிந்தித்துச் செயற்பட வேண்டும். - புனித சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர்

06.04.90 வீரகேசரி

வடக்கு-கிழக்கு மாகாணசபையைக்கூட்ட வரதராஜப்பெருமாள் விரும்பினால்,

www.tamilarangam.net

அதற்கு சட்டமும் இடமளிக்குமாறல், அரசாங்கம் அதற்கு வேண்டிய பாதுகாப்பைச் செய்து கொடுக்கும்- மந்திரி சபைப் பேச்சாளர்.

07.04.90 டெய்லி நியூஸ்

மாதாந்தம் 100 ரூபா தரும்படி திருகோணமலைத் துறைமுக ஊழியர்களிடம் எல்.ரி.ரி.ஈ. கேட்டுள்ளது.

07.04.90 ஐலண்ட்

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ்க் காங்கிரசின் தலைமைக் காரியாலயத்திலிருந்து உதவிச் செயலாளர் ஆனந்தராஜாவையும் அவர் குடும்பத்தையும் பலாத்காரமாக வெளியேற்றிய எல்.ரி.ரி.ஈ காரியாலயம் அமைந்துள்ள வீட்டைக் கைப்பற்றியுள்ளது.

08.04.90 சன்டே ஒப்சேவர்

இலங்கைப் பாதுகாப்புப் படைகளுடன் எல்.ரி.ரி.ஈ இணைந்து வடக்கு-கிழக்கில் அமைதியைக் கொண்டுவரும்- அன்ரன் பாலசிங்கம்

08.04.90 ஐலண்ட்

வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கான கூட்டம் கொழும்பில் நடைபெறும் - ஈ.பி.ஆர்.எல்.எவ்

09.04.90 சன்

வாவவுக்கலயில் 2 மாணவர்கள் உட்பட 12 பேரைக் கொலைசெய்து தீ மூட்டிக் கொளுத்திய குற்றச்சாட்டில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் அடையாளம்- காணப்பட்டார்.

திருகோணமலையில் ஒரு எல்.ரி.ரி.ஈ உறுப்பினர் சுட்டுக்கொல்லப்பட்டார். கற்பழிப்பு, பாதுகாப்புப்படைகளிடம் சரணடைந்தமை போன்றமைக்கான தண்டனை என்ற சுவரொட்டி சடலத்தின் அருகில் காணப்பட்டது.

09.04.90 வீரகேசரி

ஒரிஸ்ஸா அகதிகளை கேரளத்திற்கு - மாற்றும் முயற்சி தோல்வியடைந்துள்ளது.

இலங்கைக் கடற்பிராந்தியத்திற்குள் மீண்டும் அத்துமீறிப் பிரவேசித்ததாகச் சந்தேகிக்கப்படும் சுமார் 1,000மீனவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டனர்.

10.04.90 வீரகேசரி

புத்தாண்டை முன்னிட்டு திருகோணமலை முற்றவெளியில் பொலிசாரின் ஏற்பாட்டில் பொலிசாரும், மாணவரும் இணைந்து வழங்கிய தமிழ், சிங்கள இசை, நடன நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதில் புலிகளின் பிரமுகர் ரூபன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மூதூரில் முன்னாள் தமிழ்த்தீவிரவாத உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

செட்டிக்குளத்தில் இலங்கை இராணுவத்தினரும், இந்திய இராணுவத்தினரும் முகாம்களை அமைத்து நிலைகொண்டதினால் சொந்த வீடு, வளவுகளில் இருந்து வெளியேற்றப்பட்ட 17 குடும்பங்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல வழியின்றி இரவல் வீடுகளில் வசித்து வருகின்றனர்.

அம்புலன்ஸ் வண்டிகளில் நோயாளிகளை ஏற்றி யாழ் வைத்தியசாலைக்கு எடுத்

www.tamilarangam.net

து செல்கையில் வல்லையில் வைத்து இலங்கை கெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது மரணமான பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டிச் சாரதியான மா. பரம்சோதியின் நினைவுதினம் மேற்படி வைத்தியசாலையில் அனுஸ்டிக்கப்பட்டது.

எமது தலைவர் சுயமாகச் சிந்தித்து இந்திய இராணுவத்துடன் போராடத் துணிந்திராவிட்டால் தமிழ் மக்களின் இன்றைய கதியும், நிலைமையும் என்ன ? - புலிகளின் நாவற்குழிப் பொறுப்பாளர்.

எமது விடுதலைப் போராட்டத்தில் இதுவரை 1356 போராளிகளை நாம் இழந்துள்ளோம். இதில் 27பேர் மகளிர் இயக்க வீராங்கனைகளாவர் -விடுதலைப் புலிகளின் மகளிர்பிரிவு.

10.04.90 சன்

சமாதானத்தை நிலைநிறுத்த எல்.ரி.ரி.ஈ. அரசுடன் ஒத்துழைக்கும்-பாலசிங்கம்

11.04.90 வீரகேசரி

யுத்த நெருக்கடி மிகுந்த வேளையில் தம் உயிரையும், உடைமைகளையும் காப்பாற்றிக் கொள்வதற்காக ஊரைவிட்டு, நாட்டைவிட்டுப் பலரும் ஓடியபோது, மக்களைக் காப்பாற்றுவதற்காக உண்ணாநோன்பிருந்த அன்னை பூபதியின் அன்றைய கோரிக்கைகள் இன்று நிறைவேறியுள்ளன. - வவுனியா மாவட்ட புலிகளின் அரசியற் பொறுப்பாளர்.

பருத்தித்துறையில் வீதியால் சென்ற இளம் பெண்ணின் மீது பொலிசார் சேட்டைசெய்ததையடுத்து அப்பகுதி மக்கள் திரண்டுவந்து பொலிசாருடன் தர்க்கப்பட்டனர். இச்சம்பவத்தையடுத்து சீதுவத்துக்கு வந்த பொலிசார் அப்பாவி மக்களைத் தாக்கினர். பிரயாணிகள் வான் ஒன்றும் வல்வையில் தாக்கப்பட்டுள்ளது.

கிறன் அல்பின் தோட்ட டியனகலதோட்டத்துக்குள் வந்த நீலநிற வாகனம் ஒன்றில் இருந்த 15பேரைக்கொண்ட கோஸ்டி 2 இளைஞர்களைக் கைதுசெய்ய முயன்றபோது அதனைத் தோட்ட தொழிலாளர்கள் கூடித் தடுத்தனர். அச்சமயம் வாகனத்தில் வந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 2 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

12.04.90 ஐலண்ட்

வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கூட்டத்தைத் திருகோணமலையில் கூட்ட இருப்பதாக ஈ.பி.ஆர்.எல்.எவ் அறிவித்துள்ளது. வரதராஜப்பெருமாள் இதில் கலந்துகொள்வார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

12.04.90 வீரகேசரி

நெஸ்லே நிறுவனம் தேங்காய் பால் மா ஏற்றுமதியிலிருந்து 9இலட்சம் அமெரிக்க டொலர்களை அந்நியச் செலாவணியாகச் சம்பாதித்துள்ளது.

13.04.90 வீரகேசரி

கொழும்பில் விடுதலைப்புலிகள்-ஈரோஸ் சந்திப்பு இடம்பெற்றது. எமக்கிடையேயுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சியென ஈரோஸ் தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவம் மீது நம்பிக்கை

www.tamilarangam.net

யில்லையென பாலசிங்கம் கூறியுள்ளா-ரேயெனத் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு, அது பழைய கதை. புலிகள் இலங்-கை இராணுவத்தில் சேர இருக்கிறார்கள். அப்படியிருக்க இராணுவம் மீது நம்பிக்கையில்லையெனக் கூறுவார்களா என மந்திரிசபைப் பேச்சாளர் பதிலளித்துள்ளார்.

14.04.90 வீரகேசரி

நீதியமைச்சரும், புலிகள் இயக்கத்தலைவரும் நடத்திய பேச்சுவார்த்தையின் விளைவாக வல்வெட்டித்துறை, பருத்தித்துறைப் பொலிஸ் நிலையங்களை மீண்டும் திறப்பதில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

15.04.90 வீரகேசரி

வடக்கு-கிழக்கு மாகாண பொலிஸ் சேவைக்கு சுமார் 10,000 ஆட்களைத் திரட்ட அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இதில் அரசாங்கத்துக்கு உதவும் வகையில் விடுதலைப்புலிகள் இயக்கம் சேவைக்குத் திரட்டப்படக்கூடியவர்கள் பட்டியலை ஏற்கெனவே அரசிடம் வழங்கியுள்ளது.

17.04.90 வீரகேசரி

மாகாணசபைத் தேர்தல் நடந்தால் புலிகளுக்குள்ள மக்கள் ஆதரவை உலகறியச் செய்வதற்காக மக்கள் முன்னணி அதில் போட்டியிடும் - மக்கள் முன்னணி அமைப்பாளர்

18.04.90 வீரகேசரி

பொத்துவிலிலும், அதனை அண்டிய கிராமங்களைச் சேர்ந்த கடல் பகுதிகளிலும், அடர்ந்த வனப் பகுதிகளிலும் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான சிறியரக குண்டுவீச்சு விமானங்கள் தாழப் பறந்து ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்கும் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை.

பொலிசும், இராணுவமும் மக்களைக் காப்பாற்ற முன்வந்தன. அவர்கள் அளித்த அந்த மக்கள் பாதுகாப்புத்தான் இன்று நாம் புதுவருடம் கொண்டாட வழி வகுத்தது - பிரேமதாச

தமது பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பாத பெற்றோருக்கு தண்டனை வழங்கப்படவுள்ளது. இதற்கான சட்டம் விரைவில் வரவிருக்கின்றது.

19.04.90 வீரகேசரி

பொதுக்கூட்டங்கள் கூட்ட விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடும், காணிகளையும், குளங்களையும் சுவீகரிக்க வழங்கப்பட்டிருந்த அதிகாரமும் நீக்கப்பட்டுள்ளன.

நீண்ட காலத்தின் பின் யாழ் செயலகத்தில் மீண்டும் கடவுச்சீட்டு விநியோகம் ஆரம்பித்துள்ளது.

20.04.90 வீரகேசரி

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் ஆட்திரட்டல் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

"ஈ.பி.ஆர்.எல்.எவ் உடன் அரசாங்கம் விரைவில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும்" - ரஞ்சன்

"வடக்கு கிழக்கு தமிழர்களின் பாரம்பரியத் தாயகம் என்பது அங்கீகரிக்கப்படும்வரை எமது பிரச்சினைக்குத் தீர்வு இல்லை" - மாத்தயா

www.tamilarangam.net

"அன்னை பூபதியின் நினைவை முன்னிட்ட எழுச்சி ஊர்வலம் திருமலையில் பிரமாண்டமான ஊர்வலமாக அமைந்தது. பல்லாயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் இதில் கலந்துகொண்டனர். இந்த ஊர்வலத்தின் ஆரம்பத்தில் பிரபாகரனுடைய கட்-அவுட் தூக்கிச் செல்லப்பட்டது.

அக்கரைப்பற்று பஸ்நிலையச் சாரல்களில் அமைக்கப்பட்டுள்ள கடைகளினால் நகரின் அழகு கெடுவதுடன், சன நெரிசலும் வாகன நெரிசலும் ஏற்பட்டு வருகிறது. எனவே இக்கடைகள் அனைத்தையும் அகற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம் - விடுதலைப் புலிகள்.

மட்டக்களப்பில் ஈ. சங்கரப்பிள்ளை என்பவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளார்"

பனை ஓலைகளை தாய்லாந்து நாட்டுக்கு ஏற்றுமதி செய்ய பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

உத்தேசப் பிராந்தியக் கல்லூரி அமைப்பு முறையானது வேலையற்ற படித்தோர் தொகையை மேலும் அதிகரிப்பதோடு இளைஞர்கள் மத்தியில் நிலவும் விரக்தி நிலையை மேலும் கூட்டுமென பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

21.04.90 வீரகேசரி

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் இலங்கை இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. சகல பிரதான வீதிகளிலும் கவச வாகனங்களில் ராணுவத்தினர் ரோந்து சுற்றி வருகின்றனர். இப் பிரதேசத்தில் உள்ள பெயர்ப்பலகைகளில் காணப்படும் சிங்கள எழுத்துகள் அழிக்கப்பட்டுள்ளன.

வட கடல் பிராந்தியத்திற்குள் அத்துமீறிப் பிரவேசித்தார்கள் என்ற குற்றசாட்டின் பேரில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 57 மீனவர்கள் விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

"தமிழ்-முஸ்லீம் ஒற்றுமை பற்றிப் பேசும் புலிகள் முஸ்லீம் வாலிபர்களுக்கெதிராகக் கட்டவிழ்த்துவிட்டிருக்கும் அடக்குமுறை நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிடவேண்டும்" - அஷ்ரப்

"படித்த வாலிபர்கள் வெளிநாட்டு - மோகத்தைத் தவிர்த்து நாட்டுக்குப்பணிபுரிய வேண்டும்" - யாழ் பல்கலைக் கழக உபவேந்தர்

"இலங்கை அரசுடனான எமது பேச்சுவார்த்தை தோல்வியில் முடியலாம். அல்லது அதில் வெற்றி கிட்டாமல் போகலாம். இவைகளைப் பற்றி நாம் அலட்டிக்கொள்ளவில்லை" - விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை பிராந்தியத் தளபதி

"அன்னை பூபதி உலக வரலாறுபடைத்த தமிழ்மக் கதாநாயகியாக, உலக நாடுகளது முன்னோடியாக உயர்ந்துவிட்டார்" - மட்டு புலிகளின் அரசியல் பொறுப்பாளர்.

21.04.90 உதயன்

யாழ் மாவட்டத்தில் இந்த வருடம் முதல் மூன்று மாதங்களில் மட்டும் தற்கொலை செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை 35. இவர்கள் அனைவரும் 16க்கும் 25க்கும் இடைப்பட்ட வயதினர்

22.04.90 வீரகேசரி

விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை அரசா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ங்கத்துக்குமிடையே மோதலை ஏற்படுத்த சில தீய சக்திகள் முயற்சிப்பதாகவும், இது தொடர்பாக அரசாங்கம் உடன் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

23.04.90 வீரகேசரி

மட்டக்களப்பிலே பொலிஸ் சேவைக்கென நடைபெறும் நேர்முகப் பரீட்சையின் இரண்டாவது கட்டமாக விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி வழங்கிய பட்டியலில் உள்ளவர்கள் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

இலங்கையில் மனித உரிமைக்கமிஷன் ஒன்றை அமைக்க வேண்டும் எனக்கோரியுள்ளதுடன், அங்கு பலாத்காரமும், மனித உரிமை மீறலும் அதிகளவில் இடம்பெற சகல குழுக்களும் காரணமாக இருப்பது குறித்து கவலையடைவதாகவும் லிபறல் இன்டர்நசனல் அமைப்பு தெரிவித்துள்ளது.

23.04.90 ஈழநாடு

யாழ் குடாநாட்டில் ஐ.பி.கே.எவ்வினாலும், இந்திய ஆதரவு இராணுவக் குழுக்களாலும் பிடிக்கப்பட்டு காணமல் போயுள்ளதாக அறிவிக்கப்படும் 75 பேரைப் பற்றி வல்வெட்டித்துறை பிரஜைகள் குழு இலங்கை அரசிடம் முறையிட்டுள்ளது.

24.04.90 வீரகேசரி

அரசு-ஈ.பி.ஆர்.எல்எவ் பேச்சுவார்த்தை மேமாதம் 15ஆம் திகதிகொழும்பில் நடைபெறும்.

மாத்தளையில் சுமார் 30 வருடங்களுக்கு மேலாக வசித்துவரும் குடியிருப்புகளை 3 மாதத்துக்குள் விட்டகலுமாறு இப்பகுதி தனியார் தோட்டமொன்றின் தொழிலாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இராணுவமுகாம்களை முடிக்கொண்டுவரும் அரசு மலையகத் தோட்டங்களில் ஏற்படுத்திய இராணுவமுகாம்களையும் முடிவிட்டு தோட்டத்தின் பாதுகாப்பை - தோட்ட மக்களிடமே கையளிக்க வேண்டும். - இலங்கைத் தோட்டத்தொழிலாளர் செங்கொடிச் சங்கம்

25.04.90 வீரகேசரி

"தமிழ் பேசும் மக்களுக்கு பாதகமான விளைவுகளைத் தரும் 6ஆவது திருத்தச் சட்டத்தினை அகற்றுமாறு நாம் அரசினைக் கேட்டுள்ளோம். அதன் பின்னரே நாம் தேர்தலைச் சந்திப்போம்" -விடுதலைப் புலிகள்.

"இந்நாட்டில் 1இலட்சம் பேர்கள்தான்பணக்காரர்கள். மற்றவர்கள் அதாவது 99வீதத்தினர் ஏழைகள். அரசின் நடவடிக்கைகள் ஏழைகளின் வயிற்றில்தான் அடிக்கின்றன. அத்தியாவசியப்பொருட்களின் விலைகள் பலமடங்கு அதிகரித்துவிட்டன. இந்த நிலையில் நாம் என்ன செய்கிறோம்?எங்கே போகிறோம்?துப்பாக்கி இல்லாமல் மூன்றாம் உலகநாடுகளை ஆளமுடியாத நிலை உருவாகியுள்ளது. அதனால் வருமானம் முழுவதும் துப்பாக்கிகளை வாங்கவே செலவாகிறது -ஆனந்த தஸநாய்யக்க"

"புலிகளுடன் அரசு நடத்தும் பேச்சுவார்த்தைகள் மூடுமந்திரங்களாகவே உள்ளன" - சு.கூ உறுப்பினர்.

"வடக்கு-கிழக்கின் முழு பரிபாலனமும் இன்று புலிகளின் வசமே உள்ளது. அவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கள் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் ஆயுதபாணிகளாக அங்கு நடமாடி வருகின்றனர். இதனை அரசு கைகட்டிப்பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆனால் தெற்கில் ஆயுதம் எடுத்தோர் டயர்களின் மேல் உள்ளனர் – ஐ.தே.க உறுப்பினர்

26.04.90 வீரகேசரி

"புலிகள்–அரசு பேச்சுவார்த்தையை யாரும் சீர்குலைக்க முடியாது. எல்.ரி.ரி.ஈ. வரி அறவிடுவது உண்மை. அவர்கள் காட்டிலிருந்து வந்தவர்கள். அவர்களும் வாழவேண்டும்" – ராஜாங்க அமைச்சர்

26.04.90 ஐலண்ட்

இந்தியாவிலிருந்து நாடுதிரும்பிய புளொட் உறுப்பினரான பத்மநாதன் என்பவர் கோட்டைப் புகையிரத நிலையத்தில் வைத்து இனந்தெரியாதோர்களால் சுடப்பட்டார்.

27.04.90 வீரகேசரி

"எல்.ரி.ரி.ஈ எம்மை நம்புகிறது. ஈ.பி.ஆர்.எல்.எவ் இந்திய அரசினை நம்புகிறது" – மந்திரிசபை பேச்சாளர்

"எல்.ரி.ரி.ஈ.யினர் முன்னர் தமிழீழம் கோரியிருக்கலாம். ஆனால் இப்போது அவர்கள் சிந்தனையில் மாற்றமேற்பட்டுள்ளது. அவர்கள் தமிழீழத்தை வற்புறுத்த மாட்டார்கள்" – பாராளுமன்றத்தில் இராஜாங்க அமைச்சர்

"எல்.ரி.ரி.ஈ–அரசு பேச்சுவார்த்தை அடுத்து எப்போது நடக்கும் என்ற கேள்விக்கு, அவர்கள் எம்மவர்கள் தானே. அவசியமானபோது பேசத்தயாராக வருவார்கள் என பாதுகாப்பமைச்சர் பதிலளித்தார்.

# கோடுகள்

சமாந்தரக் கோடுகள் – ஓர்
சந்திப்பிற்காய்
ஏங்குகின்றன.

சந்திப்புக் கோடுகள் – ஓர்
இணைவை வெறுத்துப் போய்
சமாந்தரக் கோடுகளாகத்
துடிக்கின்றன.

'பிக்காஸோ'வின்
கோடுகள்
நான்கு சட்டங்களுள்
அகப்பட்டுப்
பெறுமதியாகிப் போகின.

கணக்காசிரியர் – ஒருவரின்
கோடுகள்
கரும்பலகையில்
கீறுண்டு அழிந்து போயின.

கறுப்புக் கோடுகள்....
வெள்ளைக்கோடுகள்....
மேல்க் கோடுகள்....
கீழ்க்கோடுகள் ....

எல்லாக் கோடுகளும்
முதன்மையானவைதான் – ஓர்
ஓவியத்தில் !

புலிக்கோட்டில் மட்டும்
ஏன் இந்தப் பாகுபாடு – ஓர்
சமநிலைக் கோடின்றி.

●

சித்தி

www.tamilarangam.net

சிறுகதை

# தடைகள் தகர்க்கப்படுகின்றன

"வந்து இரும். நான் வெளிக்கிட்டுக்கொண்டு வாறன்" ரமணியை அழைத்துச் சென்று வரவேற்பறையில் அமர்த்திவிட்டுத் தனது அறையினுள் வந்த சுபத்திரா உடை மாற்றத் தொடங்கினாள்.

அவ்வேளை அவள் மனம் சந்தோசக் காற்றில் சிறகடித்துப் பறந்தது.

பத்துக்கு மேற்பட்ட தமிழ்ப் பெண்கள் ஒன்றிணைந்து அந்நகரில் மாதர் சங்கமொன்றை ஆரம்பித்து நடத்திவருகின்றனர்.

மாதத்தில் ஒருமுறை கூடுவார்கள். சமூக சீர்திருத்த, சமூகமாற்றங்கள் பற்றி எழுதும் சஞ்சிகைகளிலிருந்து கவிதைகள், கதைகள், கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து, வாசித்து, விமர்சித்து கருத்துகள் பரிமாறிக் கொள்வார்கள்.

தமிழ்ச் சமூகத்தில் பெண்களின் நிலை, மதம், மூடக் கொள்கைகள், கட்டுப்பாடுகள், கலாச்சாரங்கள் என்று அவர்கள் அடிமைப்படுத்தப்படும் காரணிகளை ஆராய்ந்து, அவற்றை உடைத்து எறியக்கூடிய செயற்பாடுகள் பற்றிச் சந்திப்பில் சிந்திப்பார்கள்.

'பெண்களும், போராட்டமும்' என்ற தலையங்கத்தின் கீழ் இன்று நடைபெறப்போகும் உரையாடல் பற்றிய நினைப்பே சுபத்திராவுக்குச் சந்தோசத்தைக் கொடுத்தது.

சுபத்திராவின் வரவை எதிர்பார்த்து ரமணி காத்திருக்க, மற்றொரு அறையில்—

"இஞ்சரும், இவள் சுபத்திரா எங்க போறதுக்கு வெளிக்கிடுறாள்?" சுத்தமாக அயர்ன் பண்ணப்பட்ட சேட் ஒன்றை அல



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாரியிலிருந்து எடுத்து அணிந்த வாறு மனைவியிடம் கேட்டான் மாறன்.

"வேலை வெட்டியில்லாத ரண்டு, மூண்டு பெண்டுகள் சேந்து மாதர் சங்கமொண்டை நடத்தியினம் எண்டு சொன்னனெல்லே இண்டைக்கு கூட்டங் கூடியினமாம் அதுதான் கூட்டிக்கொண்டுபோக றமணி வந்திருக்குது" என்று பதிலளித்த ஆனந்தி தலைவாரஅவனுக்குச் சப்புக் குடுத்தாள்.

"உந்த ஊத்தவாளிக் கூட்டங்களோட சேரவேண்டாமெண்டு வெள்ளனவே அவளுக்கு சொல்லியிருக்கிறன். சொல்லுக்கேளாமல் வெளிக்கிடுறுவோ?" அவன் கண்ணாடி முன் நின்று தலைவாரினான்.

"எனக்கு உதைப்பற்றியெல்லாம் தெரியாது. நீங்களும் உங்கட தங்கச்சியும்" ஆனந்தி சமையல் அறை நோக்கிச் சென்றாள். சமைத்தல், சலவை செய்தல், வீடு சுத்தஞ்செய்தல் போன்ற வேலைகள் அவளுக்காகக் காத்திருந்தன.

"ஊரில இருந்தா சூடுவேண்டிச் செத்தாலுமெண்டு காசை காசெண்டும் பாக்காமல் லச்சத்துக்கு மேல செலவழிச்சு அவவை நான் இஞ்ச கூப்பிட்டன. அவா எங்கட கலாச்சாரம், பண்பாடுகளை அழிச்சுப் போட்டு டொச்சுக்காறர் மாதிரி வாழப்பாக்கிறா. இவையளெல்லாம் சமூகத்தைத் திருத்த வெளிக்கிட்டிட்டினம்" தனக்குள் மெதுவாக முணுமுணுத்துப் பின் "சுபத்திரா" என உரத்துக் கூப்பிட்டவாறு மாறன் தங்கையிடம் வந்தான்.

"மாதர் சங்கமும், மண்ணாங்கட்டியும். ஒண்டும் வேண்டாம் பொம்பிப்பிள்ளையெண்டால் வீட்டில அடக்க, ஒடுக்கமா இருக்க வேணும். வெளியில ஆடிக்கொண்டு திரிஞ்சால் பாக்கிற சனம் என்ன சொல்லும். பிற்காலத்தில ஒருத்தரும் உனக்கு மாப்பிள்ளை தரமாட்டினம்" வார்த்தைகள் அவன் உதடுகளினூடே வேகமாக வெளியேறின.

---

# தேவகி சற்குணம்

---

"வீட்டுக்குள்ள அடைபட்டு அடிமைப்பட்டு இருக்கிற பொம்பிளையளை வெளி உலகத்துக்குக் கொண்டுவந்து அவையளுக்கு உரிமையள், சுதந்திரங்கள் பற்றி இருக்கிற கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளத்தான் மாதர் சங்கம் துவங்கினது. ஒவ்வொரு மாதமும் நடக்கிற கூட்டங்களில புதுப்புது கருத்துகளையெல்லாம் அறியக் கூடியதாயிருக்குது. இண்டைக்கு நான் போகவேணும்.... " என்று தயங்கினாள் சுபத்திரா.

"உனக்கு இஞ்ச என்ன குறை? சாப்பாடு இல்லையோ? அல்லது உடுக்கத் துணிமணிதான் இல்லையோ? எல்லாம் வசதியாத்தானே இருக்குது. இதுகளைவிட உனக்கு வேற என்ன சுதந்திரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேணும்? நான் சொன்னால்சொன்னதுதான். மாதர் சங்கத்தை இண்டையோட மறந்திடு" அவன் உறுதியாகக் கூறினான்.

"அண்ணை, இண்டைக்கு மட்டும் போட்டுவாறன்.." சுபத்திரா கெஞ்சினாள்.

"உன்னை வளக்கிறமாதிரி வளத்திருக்க வேணும். இவ்வளவு சுதந்திரத்தைத் தந்ததே என்ர பிழை" என்றபடி அவன் வெளியே சென்றுவிட்டான். அவனுக்காக அவன் சங்கத்து நண்பர்கள் காத்திருப்பார்கள்!

"நான் வரேல்ல. நீர் போட்டுவாரும்" வெளியே பாய வந்த கண்ணீரை பலாத்காரமாகக் கண்ணுக்குள் தள்ளிவிட்டு – சோகம் படர்ந்த முகத்துடன் ரமணியை வழியனுப்பி வைத்தாள் சுபத்திரா.

∴

'தமிழர் விடுதலைச் சங்கத்தின்' பிரதான உறுப்பினர்களான மாறன், அன்ரனி, ரங்கன், குமரன் என்பவர்கள் ரத்தினத்தின் வீட்டுக்கு 'விசாரணைக்காக' வந்திருக்கிறார்கள்.

"யோசிச்சு முடிவைசொல்லுங்கோ" அவர்களிடைய நிலவிய மௌனத்தை மாறன் கலைத்தான்.

"மக்களுக்குச் சேவைசெய்யிறதுக்காகவெண்டு சொல்லிச் சங்கம் தொடங்கிக் கன காலமாச்சு. சங்கத்தின்ரை கடந்த காலச் செயற்பாடுகளை விமர்சனத்துக்கு எடுத்தால் நாறிப் போவியள். மக்கள் சரியா சிந்திக்கத் துவங்கிறவரைக்கும் உங்களுக்கு ஆதரவு இருக்கும். ஆனால் நான் இனிமேல் காசு தாறேலயெண்டு முடிவெடுத்திட்டன். இதில யோசிக்கிறதுக்கு ஒண்டுமில்லை" அறையில் நிலவிய அமைதியில் ரத்தினத்தின் பேச்சு தெளிவாகக் கேட்டது.

"காசுதர விருப்பமில்லையெண்டா அதைச் சொல்லுறதை விட்டிட்டு தேவையில்லாதகதையள் கதைக்கிறியள்" மாறன் ஆத்திரப்பட்டான்.

சங்கத்தை ஆரம்பித்துவைத்தவர்களில் மாறனும் ஒருவன் என்பதாலும், நீண்டகாலமாகச்சங்கத்தில் கடமையுணர்வுடன் – சேவைசெய்து வருபவன் என்பதாலும் அதிக உரிமைகள் அவனுக்கே வழங்கப்பட்டிருந்தன.

"நான் உண்மையைத்தான சொன்னனான். நீங்கள் சேர்ந்த காசொண்டும் இலங்கையில இருக்கிற உங்கட சங்கத்துக்குப் போய்ச் சேரேலயாம். நியாயங்கேட்க வந்தவையளையும் அடிச்சுக் கலைச்சுப் போட்டியளாம். நீங்கள் என்னவுஞ் செய்யலாம். ஒருத்தருங் கேக்க கூடாது. அப்பிடித்தானே? அழிவுப்பாதையில போய்க் கொண்டிருக்கிற உங்களுக்கு ஆதரவு தர நான்விரும்பேல" என்றார் ரத்தினம் திடமாக.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"அப்ப உங்களுக்கு தமிழ் மொழியில, தமிழ் மக்களில அக்கறையில் லையெண்டு சொல்லுறியள். இஞ்ச இருக்கிற வசதியும், சுகபோகமும் இப்பிடிச் சொல்லவைக்குது. எப்பவோ ஒருநாள் இலங்கைக்குத் திரும்பி வரத்தானே போறியள்? எங்கட சங்கத்தின்ரை தலைமை அங்கதான் என்டதை மறந்துபோகாதேங்கோ. அங்க வச்சுக் கவனிப்பம்" அவர்கள் எழுந்து விடை பெறுமலே வெளியேறினர்கள்.

"இஞ்ச இருந்து கொண்டு கனக்க ஞாயங்கள் கதைக்கினம் எங்கட சங்கம் இலங்கையில - செய்யிற சேவையள் ஒருத்தருக்கும் தெரியுதில்லை" காரை அண்மிக்கையில் ஒருவன் சொன்னன்.

"லிஸ்ற்றில இவற்றை பேரையும் எழுதிவை" இன்னொருவன் சங்கத்தின் 'சட்டத்தை' ஞாபகப்படுத்தினன்.

காரினுள் எல்லோரும் இடம்பிடித்தபின்னர் கார் புறப்பட்டது.

"எங்கட ஸ்ரட்டில மாதர்சங்கமொண்டு இருக்கெண்டு முந்தியொருக்காச் சொன்னனுனெல்லே?" என்று மாறன் கேட்க "ஓம்" என்பதுபோல மற்றவர்கள் தலையசைத்தார்கள். அவன் தொடர்ந்தான்.

"எங்கட சங்கத்து ஊழல்களை மக்களுக்கு அம்பலப்படுத்தப் போயினமாம். என்ரை தங்கச்சியும் அவையில ஒராள். கூட்டத்துக்குப்போக வெளிக்கிட்டவ நான் விடேல்ல"

"ஆளை அடக்கி வைச்சிரும். வெளியில விட்டால் சமூகத்தையே கெடுத்துப் போடுங்கள்"

"எங்களை எதிர்க்கிற அளவுக்கு அவையை வளரவிட்டிருக்கக் கூடாது"

"எங்கட சங்கத்தின்ரை செயற்பாட்டுக்கு குறுக்க நிக்கிறவையையும், கொச்சைப்படுத்துறவையையும் சும்மா விடமாட்டம்"

அவர்கள் உணர்ச்சியுடன் உரையாடினார்கள்.

"மத்தியானத்துக்கிடையில காசு சேக்கிற வேலையை முடிச்சிடுவம். பின்னேரம் மாறன்வீட்டுப் பேத்டே பாட்டிக்குப்போகவேணுமெல்லே"

'அவுட்டோபானில்' காரின் வேகம் அதிகமாக்கப்பட நீண்டு வளர்ந்திருந்த வீதியிலை மரங்கள் மறைந்து ஓடின.

∴

வெட்டப்படுவதற்குத்தயாராக ஆகாயவிமானமொன்றுமேசையின் நடுவே நிற்க, அதற்குப் பாதுகாப்புக் கொடுப்பதுபோல் பல்வகைப் பலகாரங்கள் தட்டுக்களில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

சுவர்க்கடிகாரம் முதற்

www.tamilarangam.net



கொண்டு அங்கு வருகை தந்திருந்த பெண்களின் பளபளக்கும் தங்கநகைவரை கவனமாக வீடியோ ஒளிப்பதிவு செய்தது.

ஆனந்தி திடீரென மேசைக்கு அருகில் காட்சியளித்தாள். அருகில் நின்ற மாறன் மனைவியின் கரத்தைப் பிடித்து கேக் வெட்டினான். ஆனந்தி ஒரு துண்டு கேக்கை எடுத்து அவன் உதடுகளுக்கு ஊட்டினாள்.

பார்த்து நின்றவர்கள்கை தட்டினார்கள். 'கிளிக், கிளிக்' என்று கமராக்கள் அவசரப்பட்டன

அன்பளிப்புகள் அளிக்கப்பட்டதும் ஆட்டம், பாட்டம், குடியென்று அவர்கள் களித்திருக்க, சுபத்திராவும், ரமணியும் தனிமையை நாடி 'பார்க்' ஒன்றிற்கு வந்தனர்.

ரமணிக்கு சுபத்திராவுடன் மனம் திறந்து கதைக்க வேண்டுமென்று நீண்டநாட்களாக ஆசை இன்றுதான் சந்தர்ப்பங்கள் சாய்ந்துகொடுத்தன.

"கூட்டம் நல்லா நடந்ததே?" சுபத்திரா ஆவலோடு கேட்டாள்.

"எல்லாம் நல்லாத்தான் நடந்தது. உம்மிலதான் எல்லாரும் ஆத்திரமாய் இருக்கினம்"

"ஆத்திரமோ?" என்றாள் சுபத்திரா ஆச்சரியமாக.

"பெண்விடுதலை, சுதந்திரம், உரிமைகள் பற்றி மேடையேறிக் கத்திப்போட்டு சொந்தவாழ்க்கையில தலைகீழா நடக்கிறவையைப்போலத்தான் நீருமாம்"

www.tamilarangam.net

றமணி சொல்ல மௌன மாகக் கேட்டுக்கொண்டிருந்த சுபத்திரா அசைந்தாடும் வெறும் மரங்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"நானும் பொம்பிளைதான் வெக்கப்படாமல் கதையும். நாங்கள் வெக்கப்பட்டுக்கொண்டு இருந்தமெண்டால் அதைப் பயன் படுத்த நிறையத் தீய சக்திகள் காத்துக்கொண்டிருக்கிது. நாங்கள் துணிஞ்சிட்டமெண்டால் அவையளால ஒண்டுஞ் செய்யேலாது. ஒரு சின்ன விசயத்துக்கே உம்மால சுயமாச் சிந்திச்சு முடிவெடுக்க முடியேல்ல அல்லது அனுமதிக்கப்படேல்லயெண்டால் எதிர்காலத்தை நினைச்சுப் பாரும்"

சுபத்திரா கூட்டத்தில் கலந்துகொள்ள அண்ணனிடம் அனுமதி கேட்டதையும், அனுமதிக்கப் படாததையும் றமணி நினைத்துக் கொண்டாள்.

"உம்மைத் திருத்தவே ஏலாது" என்று றமணி கூறியுங்கூட சுபத்திரா பேசாமலே இருந்தாள். அவள் மௌனத்திற்கான மர்மத்தை றமணியால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.

"குட்டக்குட்டக் குனியிறவனும் மடயன். குனியக் குனியக் குட்டிறவனும் மடயன்" சுபத்திரா மேலிருந்த நம்பிக்கைகுறைந்து எரிச்சல் அதிகரித்தபோது மாலை நேரமும் மறைந்துபோனது. பூமியுடன் இரகசியமாக உறவாட அந்த இருட்டில் மழைத் துளிகள் விரைந்தோடி வந்தன.

அன்று இருவரும் பிரிவது தவிர்க்கமுடியாமற் போனது.

∴

மாதத்தின் முதற் திகதி. பணம் சேகரிக்கப் போவதற்காக மாறன் தயாராகிக்கொண்டிருந்தான்.

"அண்ணை வெளியாலபோட்டு வாறன்"

"எங்க போறு சுபத்திரா?"

"மாதர்சங்கக் கூட்டத்திற்கு"

"அங்க போகவேண்டாம் எண்டெல்லே சொன்னனான்"

"கூட்டத்தில கலந்துகொள்ளப் போறதுநான். அதைப் பற்றி முடிவெடுக்கவேண்டினதும் நான்தான். நீங்களில்லை"

"நீர் துணிஞ்சிட்டீரோ?"

"அடங்கி அடங்கிவாழ நீங்களும் அளவுக்கு மிஞ்சீட்டியள்"

"நேற்று முளைச்ச காளான் எனக்குப் புத்தி சொல்ல வந்திட்டா"

"உங்களோட கதைச்சுக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை. நான் போட்டுவாறன்"

"நில்லடி" மாறனின் கரங்கள் அவளை அடிப்பதற்கு மேலோங்க அவள் தடுத்தாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவன் திகைத்துப் போனான்.

"போறதெண்டால் உப்பிடியே போயிடு. திரும்பி வராதை"

"நான் திரும்பி வருவன். என்னை நீங்கள் வெளியேத்தேலாது. சட்டப்படி எனக்கும் வீட்டில பதிவிருக்கிது" சுபத்திரா சென்றுவிட்டாள்.

தனது கட்டுப்பாட்டைத் தங்கை மீறிவிட்டாள். சங்கத்து நண்பர்கள் சிரிக்கப் போகிறார்கள். மானம், அந்தஸ்து, மரியாதை எல்லாம் இழந்து நிர்வாணமாக நிற்பதாக மாறன் உணர்ந்தான். ஆத்திரம் கண்களிற் பொங்கி வழியச் சுபத்திராவின் அறைக்குள் வந்தான்.

காத்திருக்கும்வரை
நம் பெயர்
காற்றென்றே இருக்கட்டும்
புறப்பட்டுவிட்டால்
புயலென்றே
புரியவைப்போம்' என்ற மேத்தாவின் கவிதைவரிகள் அவனைப் பார்த்துச் சிரித்தன. காகிதத்தைச் சுவரிலிருந்து பிரித்தெடுத்துக் கசக்கித் தரையில் எறிந்தான். இதைவிட வேறொன்றும் அவனால் முடியவில்லை.

காகிதத்தை மாறனால் கசக்கியெறிய முடிந்தது. சுபத்திராவின் உள்ளத்தில் ஆழமாக ஊறிப்போன கருத்துகளை...?



## வாசகர் கடிதங்கள்

தமிழருக்கிருக்கும் இன்றைய பிரச்சினைகள், தேவைகள் என்பவற்றைத் தூண்டில் தூக்கிக் காட்டுகின்றது. இதன் கருத்து வெளிப்பாட்டிலே வீச்சும், செறிவும் இருக்கின்றன. தூண்டிலு'க்கிருக்கும் கருத்துச் சுதந்திரம் நமக்கு ஓரளவு பொறுமையை ஏற்படுத்துகின்றது.

இலங்கை .....

வெளிநாடுகளில் வாழும் எமது தமிழ்ச் சகோதரர்கள் என்ன எண்ணங்களைக் கொண்டிருக்கின்றனர் என்பதை இவ்வாறான சஞ்சிகைகள் மூலம் அறியமுடிகின்றது.

இலங்கை .....

www.tamilarangam.net

# மாற்றப்பட்ட சட்டங்கள்




இந்நாட்டின் ஆளும் கட்சியால் கொண்டுவரப்பட்ட சட்ட மாற்றங்கள் குழப்பமானவையாகவும், தந்திரோபாயமானவை-யாகவும், கடுமையானவையாகவுமுள்ளன.

முன்னைய உள்நாட்டமைச்சரின் 'நேரடி' எதிர்ப்புகளை போலல்லாது இவை மறைமுகமான பல பாதிப்புகளை உள்ளடக்கியுள்ளன.

கலம் 27இல் வெளியான வாசகர் கடிதத்திற்கு நமது விமர்சனம் மூலம் தங்களது வக்காலத்துப் புரிகிறது. திருமணங்கள் மூலம் உருவாக்கப்படும் குழந்தைகள் சமூகத்திற்குப் பொறுப்-பாகவும், சுமையாகவும் அமையக்கூடாதென்பதே சட்டத்தின்தேவையாகும். அதாவது அவரவர் பொறுப்பிலிருந்து அவர்கள் விலகக் கூடாதென்பதே.

உதயாவின் கடிதத்திற்கு: பின்னேக்கிய வாழ்க்கையை எடுத்துக் காட்டவேண்டியது தேவையானதே. கடந்த காலத்தில் ஏற்படுத்தி வைத்தவற்றின் விளைவுகளை இன்றுவரை அனுபவித்துக் கொண்டிருக்கிறேமே தவிர இடையில் ஏதும் தோன்றவில்லை.

விஞ்ஞானத்திடம் முடிவு கேட்பது காங்கேசன் கோவிந்குமார் மட்டுமல்ல, கவிதையை பிரசுரித்ததன் மூலம் கடலோடிகளும்தான் போல் தெரிகிறது.

– தயாநிதி

வக்காலத்தா?!. சட்டங்கள் அரசுக்கே சாதகமானவை என்பதைத்தான், மனிதரை மனிதர் நேசிக்கும் சமூக அமைப்பில் இச்சட்டங்கள் அற்றுப் போகும் என்று குறிப்பிட்டிருந்தோம்.

– கடலோடிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இச் சட்டங்களால் அரசியல் தஞ்சம் கோரிய அகதிகளும், வெளிநாட்டவர்களும் தங்கள் தாய்நாடுகளுக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ விரும்பியும், விரும்பாமலும் போக வேண்டியதொரு நிலைமையை ஏற்படுத்துவதும் இம் மாற்றங்களின் நோக்கங்களில் ஒன்றாகும்.

நூற்றுக்கணக்கான பக்கங்களை உள்ளடக்கிய இச் சட்ட மாற்றங்கள் யாவற்றையும் அப்படியே தருவதென்பது சிரமமான காரியம். எனவே உங்கள் நிலைமைகள் தொடர்பாக சட்டத்தரணிகளுடன் கலந்தாலோசியுங்கள். முற்கூட்டிய நடவடிக்கைகள் பின்னர் ஏற்படக்கூடிய பல சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ள உதவக்கூடும்.

மாற்றப்பட்ட சட்டங்களில் பாரதூரமானவை எனக்கருதப்படுபவற்றுள் பிரதானமான ஒரு சில விடயங்களை மட்டுமே இங்கு தருகின்றேன்.

இந்நாட்டில் இருக்கும் வெளிநாட்டவர்களின் கீழ்வரும் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டும் தடைசெய்யப்பட்டுமுள்ளன.

1. மேற்கு ஜேர்மெனியின் ஆட்சியாளர்கள்/ஆட்சிக்கு மாசு ஏற்படுத்தல் அல்லது குந்தகம் விளைவித்தல்.
(உ-ம்: மந்திரியைப் பற்றி, ஏதாவது சட்டத்தைப் பற்றி அவதூறுகக் கதைத்தல்.)
2. ஜேர்மெனியர்களுக்கும், வெளிநாட்டவர்களுக்குமிடையிலான

---

காட்டுக்குப் போனவர்கள் கண்ணிவெடியில் அகப்பட்டுச் சிதறிப் போனார்களாம். இது இன்றைய ஈழத்தின் யதார்த்தம். தினம் தினம் நடைபெறும் இயல்பாகிவிட்ட நிகழ்வு. 'கனவுகள், வெடிகள்' கதை மூலம் எம்மை ஒரு கிராமத்திற்கு அழைத்துச்சென்று அங்கு நடைபெறும் வாழ்க்கையைக் காட்டுகிறார் கதாசிரியர்.

பாலன், இராசையா, அமுதன், தேவியக்காவின்ரை சின்னப்பெடியன்... இவர்களின் அநியாயச் சாவும், அவர்களின் உறவுகளின் அவலக் குரல்களும் எம்மை அழவைக்கிறது. தொடர்ந்தும் இது கண் முன்னே நிகழ்ந்த நிகழ்வு போல் தொடர்கிறதே.

இலங்கை அரசியலில் இன்னும் தொடரும் அராஜகமும், அதைத் தூக்கி நிலைநிறுத்தும் அரசியல் சூழ்ச்சிகளும் உழைக்கின்ற ஏழை எளிய மக்களின் வாழ்க்கையை தம் பசிக்கு இரையாக்கி வருகின்றன.

'ஒரு மரணம் இனிக்கும்' கவிதையில், "தவறி விழும் சில்லறைகளும் சதங்கள் எண்ணி எலும்புக் காட்டுக்கு முண்டு கொடுப்பர் நாளை மீண்டும் இயங்குவதற்கே" எனும் வரிகள், தொழிலாளிகளுக்

www.tamilarangam.net

உறவைச் சீர்குலைத்தல்.
(உ-ம்: தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் இந்த உறவைச் சீர்குலைப்பதாகக் கருதப்படும்.)

3. பொதுசனப் பாதுகாப்புக்கும், ஒழுங்குக்கும் குந்தகம் விளைவித்தல்.

4. இந்நாட்டினது வெளிநாட்டுத் தொடர்புகளுக்கு குந்தகம் விளைவித்தல்.
(உ-ம்: இந் நாட்டுக்கு வெளிநாட்டு ஆட்சியாளர்களோ விருந்தினர்களோ வரும்போது அவர்கள் வருகையை எதிர்த்து ஊர்வலம் ஒழுங்குபடுத்தல் அல்லது இப்படியான ஊர்வலங்களில் பங்குகொள்ளல்)

5. இந்நாட்டின் வெளிநாட்டு அரசியல் கொள்கைக்கும், இந்நாட்டின் சட்டபூர்வ விருப்புகளுக்கும் குந்தகம் விளைவித்தல்.
(உ-ம்: தென்னாபிரிக்க அரசுசுடன் இந்நாடு நல்லுறவை வைத்திருப்பதை எதிர்த்தல்)

6. இந்நாட்டின் சட்ட ஒழுங்குகளுக்கு எதிராக நடந்துகொள்ளுதல். அத்துடன் வன்முறைச் செயல்களை ஆதரித்தல் அல்லது அதில் பங்குகொள்ளுதல்
(உ-ம்: வெளிநாட்டவர்களை நாஸிகள் தாக்கினால் அவர்களைத் திருப்பித் தாக்குதல்)

7. அரசியல் விமர்சனங்கள், கருத்துகள் இந்நாட்டின் சட்ட எல்லையை மீறியதாக இருந்

---

கு முதலாளிகள் இடும் சம்பளம் எப்படி அவர்களின் சுரண்டலுக்கு

மீண்டும் உறுதி செய்கிறது என்பதை எளிய வடிவில் புரிய வைக்கின்றன. இன்றைய எமது ஐரோப்பிய வாழ்விய லையும் சிவம் படம் பிடித்துக் காட்டுகிறார். தாய்நாட்டின் அருமையையும், புகுந்த நாட்டின் கொடுமைகளையும் புதிய அர்த்தத்தில் புரிய வைக்கிறார்.

ஈழத்து புறநிலையால் வலிந்து படைக்கப்படும் சில கவிதைகளுக்கு மத்தியில், சிவத்தின் கவிதைகள் உள்ளார்ந்த தேடலை நோக்கிய பார்வையையும், அதனூடாக வெளிக்கொணரப்படும் குறியீடுகளையும் ஒத்துநிற்கின்றன

— ப. வி. ஸ்ரீரங்கன்

செய்திகளைத் தொகுத்துப் புதிய ஓர் வடிவமாகப் பிரஜைகள் தந்திருப்பது வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறது.

துணுக்குள் சிரிப்பதற்கு மட்டுமே என்று இதுவரை காலமும் எண்ணியிருந்த என்னை இன்னன்று, ராசனின் துணுக்குள் சிந்திக்க வைத்தன. கட்டுரைகள், கவிதைகள் மூலம் விளக்கமுடியாத நி

www.tamilarangam.net

தல்.
(உ-ம்: தற்போதைய புதிய வெளிநாட்டவர் சட்டங்களை எதிர்த்தல், துருக்கியில் நடைபெறும் மனிதஉரிமை மீறல்களுக்கு எதிராக இங்கு கருத்துத் தெரிவித்தல், விமர்சித்தல்.)

இந்நாட்டில் இருக்கும் வெளிநாட்டவர் கீழுள்ள குற்றங்களை இழைத்திருப்பின் நாடுகடத்தப்படுவர்.

1. இந்நாட்டின் அரசியல் சட்டங்களுக்கும், பாதுகாப்புக்கும் குந்தகம் விளைவித்தல்.
2. வன்முறைகளில் ஈடுபடுதல் அல்லது வன்முறைகளில் கலந்துகொள்ள அழைப்புவிடுதல்.
3. வேறுநாடுகளுக்குப் போயுள்ளபோது அங்கு குற்றச்செயல்களில் ஈடுபடுதல்.
4. போதைப்பொருட் பாவனைக்கு அடிமையானவர்கள் அதற்குரிய சிகிச்சைக்கு உட்படாதவிடுதல்.
5. விபச்சாரத்தில் ஈடுபடுதல்.
6. பொதுச் சுகாதாரத்திற்குத் தீங்கு விளைவித்தல் (எய்ட்ஸ்)
7. நீண்ட காலத்துக்கு வதிப்பிடம் இல்லாதிருத்தல்.
8. ஆகக் குறைந்தது 5 வருடச் சிறைத்தண்டனைக்கு உள்ளானவர்கள்.
9. தொடர்ந்து சமூக உதவி பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
10. நன்னடத்தையற்ற சிறைத்தண்டனைக்கு உள்ளானவர்கள்
11. போதைப் பொருட் சட்டத்தை மீறுதல்

மேலுள்ள குற்றங்களை இழைத்ததற்கு ஏற்றுக்கொள்ள முடியாத காரணங்களை வைத்திருப்பின் கீழுள்ள தகுதியையுடையவர்களையும் நாடுகடத்த முடியும்.

1. தங்கும் அனுமதி கொண்டவர்கள். (அவ்வன்ற்கல்ற்ஸ் பெறைற்றிகுங்)

---

றைய விடயங்களை இலகுவாக விளக்கின.

கலம் 28இல், 8ஆம் பக்கத்தில் வெளியான துணுக்கு குமுதம் போன்ற சில 'குப்பைப்' பத்திரிகைகளை நினைவூட்டுகிறது. இது போன்ற துணுக்குள் இனிமேலும் பிரசுரிக்கப்படுமானால் பக்கம் வீணாவதுடன், தூண்டிலின் தரமும் குறைந்து போகும்.

-நா. நிருபா

தரமான துணுக்குகளை எல்லோரிடமிருந்தும் எதிர்பார்க்கின்றோம்.

- கடலோடிகள்

www.tamilarangam.net



"எல்லாக் கேள்விக்கும் சரியான மறு
மொழி எழுதியிருக்கி றன்தானே. என்
மாஸ்ரர் மாக்ஸைக் குறைச்சுப்போட்டி
ருக்கிறி யள்?"

"உங்கள் தோட்டத்தில் விளைந்த மிள
காயைக்கொண்டு வந்து தந்தாயா? வா
ழைக்குலை தந்தாயா? வேறு மரக்கறிக
ளாவது தந்தாயா? கிராமப் பள்ளிக்கூட
த்துக்கு வந்த உன்னைப்போல் மக்குகளு
க்குப் படிப்பிக்கும் எனக்கு இவற்றில் எ
தையுமே காணிக்கையாகத் தராத உன
க்கு மாக்ஸ் கூடப் போடவில்லையென்று
கேக்கிறாய்? உனக்கேன் போடவேண்டும்
மாக்ஸ். போய் இரு"

— இன்னன்று

---

2. கால எல்லையற்ற தங்கும் அனுமதி(உன்பெபிறிஸ்ரற்ற அவ்வன்ற்கல்ற்ஸ் எர்லோபினிஸ்) வைத்திருப்பவர்கள் அல்லது இந்நாட்டில் பிறந்தவர்கள் அல்லது 16வயதிற்குட்பட்டு, இந்நாட்டிற்குள் பிரவேசித்தவர்கள்.

3. கால எல்லையற்ற தங்குமனுமதி கொண்டவர்கள் அத்துடன் கால எல்லையற்ற தங்கும் அனுமதி வைத்திருக்கும் ஒருவரைத் திருமணம் செய்தவர்.

4. ஜேர்மெனியரைத் திருமணம் செய்திருப்பவர்.

5. அரசியல் தஞ்சம் ஏற்றுக் கொள்ளப்பட்ட அகதிகள்(அனெக்கன்ரன்)

---

ராணி

---

www.tamilarangam.net

( 16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறுதி நிகழ்ச்சியாக பிலபீல்ட் நாடகக் குழுவினரின் "காலத்தின் சுவடுகள்" அரங்கேறியது. முன்பு எப்போதோ பார்த்த, கேட்ட, கேள்விப்பட்ட நாட்டுக்கூத்து, தாள லயம், இசை நாடகம் என்று பல வடிவங்களை ஒன்றாகத் தொகுத்து தந்தது பலரையும் கவராமல் இருந்திருக்க முடியாது.

அந்நிய நாடொன்றில் பயிற்சியாளர் இல்லாமலும், அநுபவங்களில்லாமலும்கூட இப்பழைய வடிவங்களுக்கு உயிரூட்டியது அனைத்துக் கலைஞர்களினதும் திறமையே. இலேசான ஒப்பனை, மிகையில்லாத பின்னணி இசை, ஆரவாரமற்ற பாடல்கள் அனைத்துமே நாடகத்துக்கு மெருகூட்டின.

தரகர் பங்குபற்றிய தாலயப் பகுதி கூடுதல் வரவேற்பைப் பெற்றதுக்கு யதார்த்த சம்பவங்களும், பேச்சு வழக்கும் கூடக் காரணமாயமைந்தன. இவை கலைஞர்களையும், நாடகவடிவத்தையும் பற்றிய பார்வை.

இனி நாடகத்தின் உள்ளடக்கம். சாதிப்பிரச்சினையை நந்தனார் காலத்திலிருந்து ஆரம்பித்து, சீதனப் பிரச்சினையைதொட்டுக்கொண்டிருந்தபோது திடீரென்று சம்பந்தா சம்பந்தமில்லாமல் சங்கிலியன், காக்கைவன்னியன் என்ற இடைச்செருகலுடன் நாடகம் முடிகிறது(?).

ஆரம்பத்தில் எவ்வளவுக்கு அழுத்தமான வசனங்களும் பாடல்களும் இடம்பெற்றனவோ அவற்றுக்கு நேரெதிரான விதத்தில் மிகவும் கொச்சைத்தனமான, அருவருக்கத்தக்க வசனங்கள் காறி உமிழப்பட்டன.

"என்னுடைய கட்டுகளை அவிழ்த்துவிட்டுப் பார். அப்போது தெரியும் என் பலம்" என்று சங்கிலியன் சொன்னதுபோன்ற குறிப்பிட்ட சில வசனங்கள் மக்களின் தற்போதைய நிலை

---

கலைஞர்கள் சந்திப்பிலிருந்து...

அழகாகப் பல புத்தகங்கள் எழுதலாம். எமத்தில் மட்டுமல்லாசநடைமுறையிலும் எழுதியவற்றைச் செயற்படுத்திக் காட்டவேண்டும்.

—இந்திரன்

எந்த வர்க்கம் என்றாலும் எல்லாப் பெண்களும் பெண்கள் என்ற ரீதியில் அடக்குமுறைக்கு உள்ளாகிறார்கள். இவ்வடக்குமுறைக்கு எதிராகப்போராடுகின்ற உரிமை எல்லா வர்க்கப் பெண்களுக்கும் உண்டு. பெண்கள் எப்படி இயங்கவேண்டும் என்று ஆண்கள் அறிவுறுத்தத் தேவையில்லை.

—இளங்கோ

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நினைத்துப் பார்த்தபோது...

சஞ்சிகைகள் தங்கள் முகாமுக்குள் தங்கள் கொள்கைப்படி ஆக்கங்கள், கடிதங்களைப் பொறுக்கி எடுக்கின்றன.

—சுகன்

தான் வாழுகின்ற நாட்டுச் சூழ்நிலை, காலநிலை அனுபவங்களோடு – தாய்நாட்டைப் பொருத்திப் பார்த்தல், தாய் நாட்டின் அவலத்தையும் ஏக்கத்தையும் வெளியிடல், கூடுதலான பெண்ணிலைவாதக் கருத்துகளை வெளியிடல் போன்ற புதுப் பிரக்ஞைகள் புலம் பெயர்ந்தோர்களின் கவிதைகளிலுள்ள சிறப்பம்சமாகும். ஈழத்திலிருந்தால் இந்நிலைமை வந்திருக்கவே மாட்டாது.

– குமரன்

யின் குறியீடாக சங்கிலியனைக் காட்டினாலும், சங்கிலியனின் வாயிலிருந்து வரும் தமிழ்வாத, போர் வெறி வசனங்களால் அவை முழுவதையும் மக்களின் வசனங்களாகக் கருதவும் முடியவில்லை. அவற்றை ஜீரணிக்கவும் முடியவில்லை.

அதேநேரம் இலங்கை இந்திய அரசுகளை போர்த்துக்கேயராகவும், இலங்கை அரசுடனும் இந்திய அரசுடனும் கூட்டுச்சேர்ந்து சோரம்போன இயக்கங்களை காக்கைவன்னியனாகவும் குறியீடாகப் பயன்படுத்தியிருப்பது ஆரோக்கியமானதாக உள்ளது.


இந்திய அரசுடன் கூட்டுச் சேர்ந்த ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ, ஈ. என். டி. எல். எவ் இயக்கங்களை காரசாரமாக விமர்சித்தவர்கள் இன்று இலங்கையரசுடன் கூட்டுச் சேர்ந்த எல். ரி. ரி. ஈ. யை விமர்சிக்கப் பயந்தும், குழம்பிப் போயிருக்கும் நிலையில், இந் நாடகத்தின் ஆசிரியரான முகில்வாணன் தான் புலி இயக்கத்தின் ஆதரவாளராக இருந்தும் அந்த இயக்கத்தை காக்கைவன்னியனுக்கும், இலங்கை அரசை போர்த்துக்கேயருக்கும் ஒப்பிட்டு சங்கிலியன் ஊடாக "எங்கள் போராட்டத்தை காட்டிக் கொடுத்து விட்டாயே" என்று காறி உமிழ்வதாகக் காட்டியிருக்கும் துணிச்சலைப் பாராட்டியே தீரவேண்டும். அதே நேரம் திறமையான கலைஞர்களை முகில்வாணன் தனது பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தியிருப்பதையும் அறிய முடிகிறது.

கோபால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலக்கியச் சந்திப்பு

'... கடந்த இலக்கியச் சந்திப்பின் போது பெண்ணிலைவாதம் பற்றிய கருத்துகள் பரிமாறப்பட்டபோது, ஆண்களைப் பகையாளர்களாகக் கருதுவதும் பெண்ணிலைவாதம் என்பது சமூகத்தின் ஏனைய விடயங்களோடு சம்பந்தமில்லாதது போன்றதுமான கருத்துகளைக் கொண்டதான தொனிப்பு இருந்தது என்று விஜி குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிரண்டு பேரின் கருத்துகள் பெண்ணடிமைத்தன அமைப்பைப் பேணும் உண்மையான எதிரியான அரசையும், அதனால் பாதுகாக்கப்படும் சமூக அமைப்பையும் இனம்காட்டத் தவறினாலும், ஆண்களைப் பகையாளர்களாகக் கருதுவது பெண்ணிலைவாதம் ஏனையவற்றுடன் சம்பந்தமில்லாதது போன்ற தொனிப்புகள் இருந்தன என்று கூறுவதற்கில்லை.

'... ஒதுக்கப்பட்ட நேரத்தை விட அதிகமான நேரங்களைத் தமது நிகழ்ச்சிக்கு எடுத்துக்கொண்டபோதும், தெளிவான கருத்துகள் முன்வைக்கப்படவில்லை..'என்றும் இவர் குறிப்பிட்டுள்ளார். இதேவகையான கருத்தை வேறுசில ஆண்களும் கொண்டிருந்ததை அறியமுடிந்தது.

ஆண்களே பங்குபற்றி, ஒழுங்குபடுத்தி, தலைமை வகித்து... இப்படியாகநடைபெறும் நிகழ்ச்சிகளையே பார்த்துப் பழக்கப்பட்டிருக்கும் எங்களுக்கு, பெண்களுக்கு குறிப்பிட்ட நேரமே தேவை, பெண்களுக்கேன் அதிக நேரம் என்ற மனோபாவம் இருப்பதில் ஆச்சரியமில்லையென்றாலும், இம்மனோபாவம் காலப்போக்கில் மாறவேண்டும். இதைவிட நேரம் ஒதுக்குவதில் உள்ள குறைபாடுகள் சந்திப்புக்குழுவினரையும் சாரும்.

தெளிவான கருத்துகள் வைக்கப்படவில்லையென்பதும் முற்றுமுழுதாகச் சரியல்ல.

இதேபோல் கோபால் குறிப்பிட்டிருந்த வாசிப்புமுறைகள் பற்றிய கருத்தையும் குறைகளாக எடுத்துக்கொள்ள முடியவில்லை.

( 19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது தடுத்த சுவரின் பழைய ஓட்டையினை கருதுகின்றாரோ அல்லது மேற்கு ஜேர்மெனியின் நகர்களுக்கிடையே நகரமுடியாமல் அகதிகளைத் தடுத்துக்கொண்டிருக்கும் பார்க்க முடியாத சுவர்களைக் கருதுகிறாரா? அல்லது நடந்துமுடிந்த தேர்தலில் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி பெரும் வெற்றியீட்டி இரு நாடுகளையும் ஒன்றிணைக்கும் சாத்தியத்தை உருவாக்கியிருப்பதைக் கருதுகிறாரா? என்று எமக்குத் தெரியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீண்டும் தொடங்கும்

பதவியைத் தேடியபோதுதானே
தலைமையே தகர்க்கப்பட்டது.

உரிமை மறுக்கப்பட்டபோதுதானே
கட்டுத் துப்பாக்கியும்,
கள்ளத் துப்பாக்கியும்
கனமான ஆயுதங்களாகின.

மறைவிடங்களில் வாழ்ந்தது போய்
மக்களின் மனங்களில் வாழ்ந்தபோதுதானே
தோள்களில் துப்பாக்கியோடு
தோழர்களாகச் சென்றி போட முடிந்தது.

ஆசை வந்து
அவனைக் கொண்டா(ல்)
இவனைக் கொண்டா(ல்) என்றால்
துவக்குக்குப் போடச்
சில்லுப்புட்டா அவித்துப்போட முடியும்?

யார் யாருடன் சேர்ந்து
யாரி பிரித்தாலும்
இழந்தது என்னவோ மக்கள்தானே.

கூட்டுச் சேர்ந்த இடங்களுக்கேற்ப
கொண்டு
ஆட்டம் போட்டால்
உரிமையை மக்கள் எங்கே கேட்பது?

கேட்பவர் நெஞ்சினில் சன்னம் பாயும்.
இனம் தெரியாத சடலம் கூடும்.

என்னைபோட்டுத் துவக்கை வைத்தால்
வெண்ணைகளுக்கு வேலை இருக்கும்.

கவிதை இங்கே மீண்டும் தொடங்கும்.

● தேவன்

www.tamilarangam.net

நிலையத்திற்கு வருவதற்க...

HBF இலிருந்து 155 ...

( Porsche நோக்கி ...




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எட்டாவது இலக்கியச் சந்திப்பு.

09.06.1990. சனிக்கிழமையன்று எசன் நகரத்தில் நடைபெறவிருக்கும் எட்டாவது இலக்கியச் சந்திப்பில் நான் கலந்து கொள்ள விரும்புகிறேன். நிகழ்ச்சிக்கு வருவதற்கான எனது பிரயாணச் செலவை நானே பொறுப்பேற்றுக் கொள்வதுடன் நிகழ்ச்சிக்கான பதிவுக் கட்டணத்தை (7.டி.எம்) தரச் சம்மதிக்கிறேன். நிகழ்ச்சியில் பங்குபற்ற முடியாத சூழ்நிலை ஏற்பட்டால் நிகழ்ச்சிக்கு முன்பு நிங்களுக்கு முன்னதாக அறிவிக்கிறேன்.

பெயர். ........................

விலாசம். ..................................................................

சைவம்/அசைவம்.

திகதி. ...........

தொலைபேசி இலக்கம். ..................

கையொப்பம். ..................

...வேற்புரை.

அறிமுகம்.

...ரீ.

...சனங்கள்.

...ரியர்கள், ஆக்கதாரர்கள் பதில்.

...பகுதியல் ஒப்புநோக்கில் எமது

...ந சமகால வளர்ச்சி கட்டுரை

...சித்தலும் கலந்துரையாடலும்.

...துரையாளர்கள்.

கு. பரராசசிங்கம்.

எ. அலக்ஸ்.

...ரும்பியவர்களும் பங்கு பற்றலாம்)

...ப போசனம்.

...லையக மக்களும் நாங்களும்'

...துரை வாசித்தலும் கலந்துரை

...லும்.

...துரையாளர். ஆ. வேலாயுதம்.

...ரும்பியவர்களும் பங்கு பற்றலாம்)

...வது இலக்கியச் சந்திப்பின் செய

...முவும் நடைபெறும் இடமும் த

...ரிவு.

...வது இலக்கியச் சந்திப்பின் செல

...க்கும் வரவும் வாசித்தல்.

...நீர் சிற்றுண்டி.

...க்கியமாகச் சந்திக்கும் சஞ்சி

...களில் வெளியான கவிதைகளின்

...ான கண்ணோட்டம்.

கலைச்செல்வன்.

கே.கே. முருகதாஸ்.

...நிறைவுரை.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்புடையீர்,

கடல் கடந்த தமிழர்களால் மேற்கு ஜேர்மனியில் பல சஞ்சிகைகள், நூல்கள் வெளியிடப்படுகின்றன. இச்சஞ்சிகையாளரும், ஆக்கதாரர்களும், வாசகர்களும், இலக்கிய ஆர்வலர்களும் ஒன்றுகூடி சந்தித்து தம் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளும் 'இலக்கியச் சந்திப்பு' தொடரில் எட்டாவது சந்திப்புக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்விலக்கியச் சந்திப்பில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் இவ்வழைப்பிதழுடன் உள்ள விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து 02.06.1990 இற்கு முன்பதாக கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகிறீர்கள்.

நிகழ்ச்சி மண்டபத்தில் சஞ்சிகைகள், நூல்கள் போன்றவை காட்சிக்கும் விற்பனைக்கும் வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நன்றி,

எட்டாவது இலக்கியச் சந்திப்புக் குழு.

தொடர்பு முகவரி.

A. Velautham,

Mittweg str. 21,

4300 Essen 1.

நிகழ்ச்சி நிரல்.

9.30. 9.40.

9.40. 9.50.

9.50. 10.00.

10.00. 10.45.

10.45. 11.30.

11.30. 13.00.

13.00. 14.00.

14.00. 15.15.

15.15. 15.30.

15.30. 15.45.

15.45. 16.00.

16.00. 17.45.

17.45.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரபடம்.

)

.)




இலக்கியச் சந்திப்பு

ILAKKIYACH CHANTHIPPU

காலம். 09.06.1990. சனிக்கிழமை.

நேரம். 09.30 மணி.

இடம் . Psirrsaal St.Babara.
Elisen str 11 -13,
4300 Essen 1.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தூண்டில்

மே 1990 கலம்:29

ஆசிரியர் குழு ........ கடலோடிகள்

வெளியீடு ............ தென்னாசிய நிறுவனம்

முகவரி ............. THOONDIL
SÜDASIEN BÜRO
Grosse Heimstr 58
4600 Dortmund 1
West Germany

தொலைபேசி இல. .... (0231) 136633

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே.

ஆக்கதாரர்களே அவர்களின் ஆக்கங்களுக்குப் பொறுப்பாளிகள்.

பெயர், முகவரி போன்ற முழுவிபரங்களும் இல்லாத ஆக்கமோ, விமர்சனமோ பிரசுரிக்கப்பட மாட்டாது.

## சந்தா விபரங்கள்

| | | |
|---|---|---|
| மேற்கு ஜேர்மனி: | 6 மாதங்கள் ... | 20,- டி.எம் |
| | 1 வருடம் ... | 38,- டி.எம் |
| வங்கி முகவரி: | Stadtsparkasse Dortmund. | |
| கிளை இல: | BLZ 440 501 99 | |
| கணக்கு இல: | 571 001 799 | |

| | | |
|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள்: | 6 மாதங்கள் ... | 25,- டி.எம் |
| | 1 வருடம் ... | 48,- டி.எம்ம் |
| ஏனைய நாடுகள்: | 1 வருடம் ... | 50,- யு.எஸ்.டொலர் |
| தபாற்கந்தோர் முகவரி: | Postscheckamt Dortmund | |
| கிளை இல: | BLZ 440 100 46 | |
| கணக்கு இல: | 308 074 68 | |


குறித்த சந்தாவுக்கான உங்கள் நிதியை தூண்டில் முகவரிக்கு அனுப்பி வைத்ததும் அது குறித்து கடிதம் மூலம் அறிவிப்பதனால் சஞ்சிகையை அனுப்புதற்குரிய கால தாமதத்தைத் தவிர்த்துக்கொள்ள உதவலாம்.

நன்றி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நம்பிக்கை



புத்திரங்களின்
பற்றுக்குறையினில்
எம்மைப்
பகுத்து ஆய்வு
செய்ய முடியவில்லை.

காலம் காலமாக
கடும் பனியில்
கடுமையாக
உழைப்பை வழங்கி
உறவுகள்
லயத்திலும்
பிள்ளை மடுவத்திலும்
உணர்வுகளை
வரண்டு
உண்பதற்காக
உழைத்து
உருக்குலைந்து
இழப்பதற்கு
ஏதும் இன்றி
இன்றுவரை
இருந்துவிட்டோம்.

எம்முள்
முகிழ்த்த நினைவுகளை
முளையிலேயே
கருகவிடாமல்
முகிழவிருக்கும்
புதிய முகிழ்களுக்காய்
முன்றலில்
பதியம் போடுகின்றோம்.

உருவழிந்த
எமதுடல்கள்
சுரண்டலுக்கு
முடிவு தேடும்
எமது முகிழ்களுக்கு
எருவாகும்.

எமது எச்சங்கள்
சுரண்டலற்ற
சுதந்திர
சமூகம்
படைக்கும்.

**நிவேதிகா**